Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

INTERNET BROWSING

உங்கள் கனவுகளை நனவகாக்கும் விதத்தில் (Global Informatics) நிறுவனத்தின் மிகக் குறைந்த கட்டணத்தில் 1 hour - 50/= உங்கள் இணையத்தளத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும் என்பதை அறியத்தருவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

gi@netcafe

Internet Brosing Center

Global Informatics (pte) Ltd.
379, Kasthuriyar Road, Jaffna.
Tel: 077 7364247, 021 222 5735 - 6

(சி-1172)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 05 (04.08.2003) திங்கட்கிழமை இதழ்: 305



யாழ்.வந்த ஜப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சரும் தூதரக அதிகாரிகளும்

## அபிவிருத்தி - நிரந்தர சமாதானத்துக்கு இடைக்கால நிர்வாகமே அவசிய தேவை!

### யாழ்.வந்த ஜப்பானிய பிரதி அமைச்சர் தெரிவிப்பு

ஜப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெட்சுவா யானோ, நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்து, இங்குள்ள நிலைமைகள் குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

நேற்றுக்காலை விமான மூலம் பலாலிக்கு வந்த ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர் - பலாலி படைத்தளத்தில் இடம்பெற்ற விசேட மாநாட்டில் பங்குபற்றினர்.

இந்த மாநாட்டில், குடாநாட்டில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாக படையதிகாரிகளுடன் ஆராயப்பட்டது.

இணுவில் பகுதி நலன்புரி முகாம்களை பார்வையிட்ட ஜப்பானியக் குழுவினர், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற 'அம்டா' மருத்துவக் குழுவினரின் மருத்துவ முகாமையும் பார்வையிட்டனர்.

அங்கு இடம்பெற்ற கருத்தரங்கில் பங்குபற்றி உரையாற்றிய ஜப்பானிய பிரதிவெளிவிவகார அமைச்சர் தனது உரையில் தெரிவித்ததாவது,

"மக்கள் தங்கியுள்ள நலன்புரி முகாம்களையும், மீளக்குடியமரும் பிரதேசத்தையும் பார்வையிட்டதுடன், 20 வருடப் போரின் பின்னடைவுகளையும் உணர்ந்தேன். உதவிகளும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு குறித்து ஆராய இரு வாரங்களுக்குள் புலிகள் பேர்ளினில் சந்திப்பு!

## பாலா - தமிழ்ச்செல்வன் - ருத்திரகுமாரன் பங்கேற்பர்

(கொழும்பு)

**வட- கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பாக - அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டவரைபு குறித்து, ஜேர்மனியின் - பேர்ளின் நகரில் விடுதலைப் புலிகள் ஆராயவுள்ளதாகத் தெரியவருகிறது.**

திட்டவரைபு குறித்து - புலிகள் கலந்தாலோசனை நடத்துவதற்கு, ஜேர்மனி, சுவீடன், நோர்வே, பிரான்ஸ் போன்ற நாடுகள் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறது.

எனினும், இந்தக் கலந்தாலோசனைகள், இந்த மாத நடுப்பகுதியில், ஜேர்மனியின் பேர்ளின் நகரிலேயே இடம்பெறலாம் எனக் கூறப்படுகிறது.

இந்தக் கலந்தாலோசனையில் கலந்துகொள்வதற்காக, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அடுத்த வாரம் பேர்ளினுக்குப் புறப்படுவார் எனவும், கிழக்குப் பிராந்தியத் தளபதிகளுடன் இடைக்கால நிர்வாக யோசனை தொடர்பாக ஆராய்ந்து, அவர்களின் கருத்துக்களை அறிந்துள்ள தமிழ்ச்செல்வன், பேர்ளின் கலந்துரையாடலில் இது தொடர்பான கருத்துக்களை முன்வைப்பார் எனவும் தெரியவருகிறது.

இந்தக் கலந்துரையாடலில், விடுதலைப் புலிகளின் அரசியல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உளவுப் பிரிவு உறுப்பினர் மூதூரில் சுட்டுக் கொலை!

திருகோணமலை - மூதூர்ப் பகுதியில், விசேட பொலிஸ் பிரிவின் முன்னாள் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவர் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று அதிகாலை 5 மணியளவில், மூதூர், 59 ஆம் கட்டை, ஜின்னா நகரின் பிரதான வீதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், இதே இடத்தைச் சேர்ந்த நூர்தீன் தில்பார் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார்.

நேற்றுக்காலை ஜின்னா நகரிலுள்ள தனது வீட்டிலிருந்து பிரதான வீதிக்குச் சென்றுகொண்டிருந்தவேளை, இவர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில், சம்பவ இடத்திலேயே இவர் உயிரிழந்தார். (04,10)

## சட்டவிரோதமாக இத்தாலிக்கு செல்லமுயன்ற 23 பேர் கைது!

(கொழும்பு)

இத்தாலிக்கு சட்டவிரோதமாகச் செல்லமுயன்ற 23 பேர், புத்தளம் - வென்னப்புவ கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் வென்னப்புவக் கடலில் படகுகள் நங்கூரமிட்டிருந்ததையடுத்து, அந்தப் படகுகளை கடற்படையினர் சோதனையிட முற்பட்டனர். இதனையடுத்து, ஒரு படகிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. கடற்படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில், படகிலிருந்த - சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற ஒருவர் காயமடைந்தார். கைதுசெய்யப்பட்டவர்களும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட இரு படகுகளும், கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## வடமராட்சி மீனவர் பிரச்சினைகள்; பருத்தித்துறையில் கலந்துரையாடல்!

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் - இராணுவம் மற்றும் கடற்படையினரால், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயவுள்ள முத்தரப்பு உயர்மட்டச் சந்திப்பு, நேற்று பருத்தித்துறையில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு, பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள 524 பிரிக்கேட் கட்டளைப் பீடத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், இராணுவத்தினர், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மற்றும் கடற்தொழில் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இராணுவத்தினர் தரப்பில் - 524 வது படையணியின் கட்டளை அதிகாரி தல்தாகொட, கேணல் கே.பி. ரட்ணாயக்க ஆகியோரும், கடற்தொழிலாளர் தரப்பில் - வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கத்தின் தலைவர் சூரியமூர்த்தி, சமாசத்தின் செயலாளர் ச.சூரியகுமார் மற்றும் 14 கடற்தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் - யாழ்ப்பாணத்துக்கான கடல் வலயங்களுக்குப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சுழிபுரத்தில் மீன்பிடிக்க கட்டுப்பாடு!

சுழிபுரம் பகுதியிலுள்ள மீனவர்கள் - தொடர்ந்து மூன்று தினங்கள் மீன்பிடிக்காவிடில், மூளாயிலுள்ள கடற்படை அதிகாரிகளுக்கு உரிய விளக்கமளிக்கவேண்டுமென, கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

உரிய விளக்கம் அளித்தாலே, தொடர்ந்து மீன்பிடிக்க புதிய அனுமதி தரமுடியும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை - காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து 15 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலேயே மீன்பிடிக்க வேண்டும் என்ற புதிய நிபந்தனையை கடற்படையினர் பிறப்பித்துள்ளனர்.

முன்னர் - காங்கேசன்துறை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க ஜப்பானிய அரசு முயற்சி செய்யவேண்டும்!

### யாழ்.பொது அமைப்புகள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தை, மீண்டும் தொடர்வதற்கான சூழல் ஏற்படுவதற்கு - ஜப்பான் அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென - யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதிக்கும், சமாதானத்திற்குமான ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் வந்திருந்த ஜப்பான் பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் கையளித்த மகஜரிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

எமது அமைப்பு - கடந்த காலங்களில் சமாதானம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, இராணுவத்தினருக்கும், அரசியல் தலைவர்களுக்கும் சுட்டிக்காட்டியிருந்தது. இந்தக் கோரிக்கையை, அவர்கள் பொருட்படுத்தவில்லை. இதனால்தான், தற்போதைய சமாதானப் பேச்சு தடைப்பட்டுள்ளது.

வட - கிழக்கு மாகாணத்தை - இராணுவமயப்படுத்தல், உயர்பாதுகாப்பு வலயங்களை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகள், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். பாதுகாப்புப் படையினரின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிவெளிவிவகார அமைச்சரும் யாழ்ப்பாணத்தில்

(வண்ணை)

யாழ்.குடாநாட்டில், நேற்று ஜப்பான் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெட்சுவா யானோ பங்குபற்றிய நிகழ்வுகளில், இலங்கை பிரதி வெளிவிவகார அமைச்சர் லால் தர்ம சிறி கமகேயும் கலந்துகொண்டார்.

இவரது வருகையை விளம்பரப்படுத்தாத வகையில், ஜப்பான் உயரதிகாரிகளும் நடந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (111)

EXPOAIR

your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297

0712348888 0712349999 074512666 01360290 01360291

email . jaffna @ expoavi . com.

(சி -1139)

எக்ஸ்போஎயார்

வான் வெளியில்
உங்கள் தோழன்...

GNANA BEAUTY PARLOUR

ஞான அழகுக் கலையகம்



- Bridal/Dance make up
- Facial For different types of Skin
- Bleeching
- Manicure & Pedicure
- Hair styles
- Threading
- Waxing
- Wedding cake orders will be under taken

மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்

162, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

Tel - 021 222 2224, 222 3885

(சி-1309)



உங்களுக்குத் தேவையான நவீன விதமான சன் கிளாஸ், டே அன் நயிட் கிளாஸ், பிளாஸ்டிக் லென்ஸ் போன்ற சகலவிதமான கண்ணாடிகள் 1 மணித்தியாலத்தில் குறைந்த விலையில் செய்துதரப்படும். இலவச கண் பரிசோதனை. பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

ஒளிச்சுடர்





மூக்குக் கண்ணாடியகம்

44A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


## பொன்னாலை வரதராஜப் பெருமாள் கொடியேற்றம்!

பொன்னாலை ஸ்ரீ வரதராஜாப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவம், இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 நாட்களுக்கு நடைபெறும் இந்த உற்சவ நிகழ்வில், எதிர்வரும் 20 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்ததோற்சவமும் நடைபெறும். உற்சவ காலத்தில் தினமும் இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை "இராமாயணம்" என்னும் பொருள் பற்றி இராசெல்வ வடிவேல் அவர்களின் தொடர் சொற்பொழிவு நடைபெறும். (118)

## சின்னமுத்து தடுப்பூசி

மருதங்கேணிப் பகுதியில் இயங்கிவரும் பாடசாலை மாணவர்களுக்கு சின்னமுத்து தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. 10 வயது தொடக்கம் 15 வயது வரையிலான மாணவர்களுக்கு மேற்படி தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

## மாணவர்களுக்கு சத்துணவுமா

பளைப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு முக்கூட்டு சத்துணவுமா வழங்கப்பட்டுள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உட்பட, 19 முன்பள்ளி மாணவர்களுக்குரிய சத்துணவுமா, அந்தந்த முன்பள்ளி ஆசிரியர்களிடம் வழங்கப்பட்டன.


நிறைஞ்சனாஸ் சங்கானை

முரளி, தேவயானி நடித்த

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

RED SCORPION

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1285)



ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

இயக்கம்: விக்ரமன்

(சி-1284)



உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களைப் பொருத்தவும், மிதப்புப்பற்களுக்குச் சிறந்த முறையில் கிளிப்போடவும் நாடுங்கள்.





மூக்குக்கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

T.P. 222 2486, கிளை கொக்குவில், சுன்னாகம்.

குறிப்பு: சுன்னாகம் கிளையில் விசேட கழிவு உண்டு



பாடசாலை அதிபர்களே மாணவமணிகளே

உங்களுக்குத் தேவையான பாடசாலைப் புத்தகங்கள் எல்லாம் 10% -20% வரையான கழிவுடன் அள்ளி வழங்கப்படும். தரமான பாடசாலை அலுவலக உள்ளீடுகள், எல்லா. வகையான பாடசாலை நூல்களும், சரித்திரம், சாஸ்திரம், பிர பல எழுத்தாளர்களின் படைப்புகள், அறிவுவளர்க்கும் நூல்கள், சங்கீத உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் (கணிதம் கற்க), டீன் உபகரணம் (ஆங்கில உச்சரிப்பு), ஸ்கிறபல்ஸ், மோனாபொலி, அத்துடன் மக்கினற, பெனல், பச்சை போட் வகைகள், எல்லா அளவுகளிலும் பயில் (File) அலுமாரி (கபினற்) இரும்பு அலுமாரி, பாடசாலை நூல் அலுமாரி, தொழில்சார் உபகரணங்கள், விவசாய ஆயுதங்கள் எல்லாவற்றையும் ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள். எங்களிடம் கொள்வனவு செய்யும் பொருட்கள் இலவசமாக வன்னிவரை பட்டுவாடா செய்யப்படும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,

212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P 021-2225542











விவசாயப் பெருமக்களே !

சைவ உணவக உரிமையாளர்களே!

ஆயுர்வேத வைத்திய சிகாமணிகளே!

எமது ஸ்தாபனத்திற்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

எம்மிடம்

- நெல் குற்றும் இயந்திரம்.
- உமி நீக்கும் இயந்திரம் (China).
- அரிசி பொலிசர் (China).
- மிளகாய், உழுந்து, கோப்பி அரைக்கும் (நவின் கெனடி பிராண்ட்) உலகப் பிரசித்திபெற்ற இயந்திரம்.
- எந்த விதமான கடின உழைப்பிற்கும் அதிசக்திவாய்ந்த (லிஸ்ரரைப்) டீசல் என்ஜின் (கெனடி நவின்) மாக் 20H.P. 10H.P. குதிரைசக்தி கொண்டவை. பெற்றரைப் 25 H.P. 15 H.P. 7 1/2 H.P. 6 H.P. (குதிரை சக்தி) கொண்டவை. விசை கூடிய என்ஜின் (கெனடி நவின்) R.P.M. 1500.
- கோப்பி அரைக்கும் இயந்திரம். சைவ உணவகத்துக்கு உழுந்து, சட்னி, சம்பல் போன்று நீர்சேர்த்து அரைப்பதற்கு கெனடி நவின் ஈர அரையல் இயந்திரம். 2, 3, 5, 7 1/2, 10, 15, 20 கிலோ வரை அரைக்கும் அளவுகளில் உண்டு. இவற்றில் மருந்து மூலிகைகளும் அரைக்க முடிவதால் வைத்திய சிகாமணிகளுக்கும் உகந்தது.
- ஈர அரிசி அரைக்கும் China மில். 17, 23, 37, 42 போன்ற தங்கள் தேவைக்கேற்ப அளவுகளில் இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவற்றுக்கான சகல உதிரிப்பாகங்கள் றபர், ரோமம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட பட்டிவகைகள் எல்லா அளவுகளிலும் "V" பெல்ட் (பட்டி) வகைகள். றபர் ஹோஸ், கிறைண்டர் பிளேற், சல்லடை வகைகள், மோட்டார் ஸ்ராட்டர் எல்லாம் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளளாம்.
- வங்கிக் கடன் வசதி அல்லது குத்தகை வசதி தேவையானால் ஒழுங்கு செய்து தரப்படும். (40 % வரை)

நேரில் வரவும்

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்

ஏக இறக்குமதியாளரும் விநியோகஸ்தரும் 212, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021-2225542

சமுத்திரா ரேட்ஸ் லிமிட்டட்

117 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

☎ : 021 - 222 2938

# ஆட்சிக்கு வரும் இருபிரதான கட்சிகளுமே தமிழர்களை ஒடுக்குவதில் துணைபோகின்றன!

## மு.திருநாவுக்கரசு பல்கலைக்கழகத்தில் உரை

(யாழ்ப்பாணம்)

சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழர் தொடர்பான பிரச்சினைகளில் ஒரேமாதிரியான முடிவையே எடுக்கின்றன. ஒரு கட்சி ஆட்சியில் இருக்கும்போது, தமிழர்களை ஒடுக்குவதற்கு மற்றக்கட்சி துணைபோகின்றது. மற்றைய கட்சி ஆட்சிக்கு வரும்போது, முன்னர் ஆட்சி புரிந்த கட்சி தமிழர் மீதான ஒடுக்குமுறைக்குத் துணைபோகின்றது.

இவ்வாறு- வியாசனின் 'உலைக்களம்' நூல் வெளியீட்டு விழாவில் மதிப்புரையாற்றிய மு.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதியரங்கில் இடம்பெற்ற- வியாசனின் உலைக்களம் நூல் வெளியீட்டில் தொடர்ந்து மதிப்புரையாற்றும்போது, அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையின் உள்நாட்டு அரசியல் முற்றுமுழுதாக வெளிநாட்டு அரசியலாகவே காணப்படுகின்றது. இலங்கையை வல்லரசுகளுக்கு விற்கும் காலமாக இது காணப்படுகின்றது.

தமிழர்களை அடக்கும் சிங்களவர்கள் - அடங்கவேண்டிய காலமாக இக்காலம் விளங்குகின்றது. தமிழர்கள் அமைதியை எதிர்பார்தது நிற்கின்ற காலமாக இக்காலம் விளங்குகின்றது.

இலங்கையின் அரசியலைப் பொறுத்தளவில், அது எவ்வாறு இருந்தது என்பது பற்றி நோக்க வேண்டியது அவசியமாகும். அரசியல் ஒழுங்கு என்பது, பொதுவாக முதலாளித்துவ அரசியல் ஒழுங்கின் கீழ் அமைந்திருப்பதைக் காணலாம். சமதர்மம் நிலவிய காலங்களில்கூட, இவ்வாறான ஒழுங்குமுறையே நிலவிவந்துள்ளது.

முதலாளித்துவ அரசியலின் கீழ், இலங்கையின் அரசியல் துண்டு துண்டாகி விற்கப்படுகின்ற ஒரு நிலையைக் காணலாம். ஒரு காலத்தில் சீனா எட்டு நாடுகளிடம் விற்கப்பட்டிருந்தது. அதேபோல, இலங்கை இப்போது நான்கு நாடுகளிடம் விற்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிடம் சுதந்திர வர்த்தக வலயத்தையும், சீனாவிடம் கடற்பகுதியையும், இந்தியாவிடம் வர்த்தகத்தையும்,ஜப்பானிடம் ஏனைய வர்த்தக நடவடிக்கைகளுக்காக இலங்கை விற்கப்பட்டுள்ளது.

எல்லா நாடுகளையும் இணைத்து வைத்திருக்கும் வர்த்தக உறவு, இலங்கை அரசியலில் இணைந்திருக்கின்றது.

இந்த அடிப்படையில்தான், தமிழர்களை அடிபணியவைக்கும் முயற்சிகளில் ஐ.தே.க. அரசும், சுதந்திரக் கட்சியும் ஈடுபடுகின்றன.

வெளிநாடுகளின் வர்த்தக ஆதிக்கத்திற்குட்பட்டு இலங்கை விளங்குவதால்தான் - இலங்கை அரசு தனது பேரம்பேசும் சக்தியை இழந்துவருகின்றது.

இலங்கையில் நிலவும் பிரச்சினை- இலங்கை இராணுவத்துக்கு எதிரான பிரச்சினை மட்டுமல்ல, இலங்கை இராணுவத்திற்கு எதிரான போராட்டம் என்பது, வெற்றி பெறக்கூடிய போராட்டமாகவே காணப்படும். ஆனால், பிரச்சினை இராணுவத்தையும் தாண்டி அதற்கும் அப்பாற்பட்டு விரிந்துள்ளது.

ஐரோப்பிய சந்தையை அமெரிக்கா கைப்பற்ற முயல்கின்றது. இந்த நிலையில், ஜப்பானிற்கு இலங்கை அரசு இடங்கொடுக்கின்றது.

வெளிநாட்டு சக்திகள் -இலங்கை நாட்டைத் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் இடமாகக் கருதுகின்றது.

அமெரிக்காவிற்குப் பின்னால் நின்றுகொண்டு கிடைத்த இலாபங்களைப் பங்குபோடும் அரசியலாக, வெளிநாட்டு அரசியல் காணப்படுகின்றது.

சீனா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள், ஈராக்கை - அமெரிக்கா தாக்கியபோது, கண்டித்தனவேதவிர தமது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்திப் போரைநிறுத்த முன்வரவில்லை. இவ்வாறான ஒரு நிலைக்கு அவர்களிடையேயுள்ள வர்த்தக உறவுநிலையைக் காரணமாகக் குறிப்பிடலாம்.

அதேபோல, தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் திறமை என்னவென்றால், எல்லா நாடுகளையும் நண்பர்களாக்கிக் கொண்டமையாகும்.

சர்வதேச அரசியலில் ஏறி இறங்கி வந்த இவ்வாறான ஒரு பின்னணியில், இலங்கை அரசியலை நேசிக்க வேண்டும்.

சமஷ்டித் தீர்வை வழங்க ஐ.தே. கட்சி தயார் என்ற ஒரு நிலையில், சுதந்திரக்கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. பொதுஜன ஐக்கிய முன்னணி தயாராக இருந்தபோது, ஐ.தே.கட்சி எதிர்த்து வந்தது.

இனவாதத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒருகட்சி- இன்னொரு கட்சிக்கு உதவிவந்த ஒருநிலைப்பாட்டையே, நாம் அவதானிக்கமுடிகின்றது.

ஒடுக்குபவர்கள்- ஒடுக்கப்படுபவர்களை ஒடுக்கிக்கொண்டே இருக்கிறார்கள். புலிகள் பொறுமையோடு இருக்குமாறு வேண்டப்படுகின்றனர். அவர்கள், பொறுமையாக இருப்பதற்குத் தயார். ஆனால், அரைபடுபவர்கள் யார் என்பதுதான் கவலையளிக்கும் விடயமாக உள்ளது. அரைபடுபவர்கள் பொதுமக்களாகத்தான் இருப்பார்கள்.

அரசியற்தீர்வை முன்வைத்தபோது, அவற்றின் கபடத்தன்மையை அறிந்து குரல்கொடுத்தவர்கள்- பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு, குண்டுவீச்சுக்கு உள்ளானார்கள். சமாதானத்தைக் குழப்ப முயற்சித்தவர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டார்கள்.

தற்போது சிங்களத் தலைவர்கள் சமாதானத்தை குழப்ப முயற்சிகள் எடுக்கும்போது, அவர்கள் மீது குண்டு போடமுடியாது இருக்கிறார்கள். சமாதானத்தை வலியுறுத்தி ஊர்வலம் போகமுடியாதவர்களாயும், உண்ணாவிரதம் மேற்கொள்ள முடியாதவர்களாயும் பேரினவாதிகள் உள்ளனர்.

சிங்கள மக்களிடையே சமஷ்டி பற்றிய முரண்பாடான கருத்துக்களே நிலவுகின்றன.

தமிழர்களை அடக்குவதற்கு, சர்வதேசத்திடம் இலங்கை அடகுவைக்கப்படுவதை, சிங்கள மக்கள் கண்டுகொள்ளாது இருக்கிறார்கள்.

போராடக்கூடாது, சண்டை வேண்டாம் என்று கூறும் சிங்கள மக்கள்- சமஷ்டி பற்றிக் கதைத்தால் தூர விலகிவிடுகின்றார்கள். 'தேசியம்' என்ற ஒரு சொல்லை, பற்றிப்பிடித்துக் கொண்டு, சமஷ்டி என்பது பிரிவினை என்று தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

சமஷ்டி என்பது பிரிவினை அல்ல ஒன்றுக்கு ஒன்று உதவியாய் இருக்கும் ஒரு அமைப்பாகும். அது கணவன் - மனைவி உறவு போன்றது.

மத்தியில் பொதுத் தேவைகளை உணர்த்தும் அலகு விட்டுக்கொடுப்பதும், அலகின் தனித்துவத்தை உணர்நதும், மத்திய அரசுக்காக உழைபபதும் மத்திக்காக அலகும், அலகுக்காக மத்தியும், உழைத்து செயற்படும் ஓர் அமைப்பே சமஷ்டி ஆகும்.

சிங்கள மக்களும் - தமிழ் மக்களும் ஒன்றிணைந்து தேசியத்துக்காக உழைக்கின்ற அமைப்பாகவே சமஷ்டி இருக்கும். அங்கு சிங்கள மக்களைப் பற்றி - தமிழ்மக்களும், தமிழ்மக்களைப் பற்றி - சிங்கள மக்களும் புரிந்துணர்வுடையவர்களாக இருப்பார்கள்.

இவற்றைச் சிங்கள மக்கள் உணரத் தவறுகின்றார்கள். ஜூலை கலவர நினைவுநாளை முன்னிட்டு- நடைபெற்ற போராட்டத்தில், 100 பேர் மாத்திரமே கலந்துகொண்டனர். ஏனைய சிங்கள மக்களால் கலந்துகொள்ளும் மனப்பான்மை இருக்கவில்லை, இன்னமும் வளரவில்லை.

நடைமுறையில் பத்திரிகைகளும் யாப்பின் கருத்துக்களை அறிந்திருத்தல்வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஒன்றரை லட்சம் இந்தியத் தமிழருக்கு பிரஜாவுரிமை!

(கொழும்பு)

அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் சட்டமூலத்தில், 1 லட்சத்து 60 ஆயிரம் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு- இலங்கை பிரஜாவுரிமை கிடைக்கவுள்ளது.

இது சம்மந்தமாக இலங்கை அதிகாரிகள், இந்திய அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்கள்.

இலங்கை குடிசன மதிப்பீட்டின்படி, 5.5 வீதமானவர்கள் இந்தியத் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரூபவாஹினி வெற்றிடங்களுக்கு 35 ஆயிரம் விண்ணப்பங்கள்

(கொழும்பு)

ரூபவாஹினி செய்தியாளர்கள் மற்றும், தயாரிப்பாளர்களுக்குக் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு 35 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் விண்ணப்பித்திருப்பதாக, ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்டளவான வெற்றிடங்களுக்கு 35 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருப்பதானது, நாட்டில் வேலை வாய்ப்புப் பிரச்சினைகள் அதிகரித்திருப்பதையே காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அரசாங்கத்தின் 67 நிறுவனங்களை தனியாருக்கு விற்க அரசு நடவடிக்கை!

அரசாங்கத்தின் 67 நிறுவனங்களை - தனியாருக்கு விற்பதற்கு அல்லது மூடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக 'பேர்க்' ஆணைக்குழு தமது பரிந்துரையில் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம், 12 நிறுவனங்களை மூடுவதற்கும், மேலும் 5 நிறுவனங்கள், வேறு நிறுவனங்களோடு இணைப்பதற்கும், 50 நிறுவனங்கள் மூடிவிடுவது, விற்பது, மக்கள் பயன்படுத்துவது எனத் தீமானித்துள்ளதாக அறியவருகின்றது.

மூடிவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில், விவசாய அபிவிருத்தி அதிகாரசபை கூட்டுறவு முகாமையாளர் நிறுவனம், தேசிய உரக் கூட்டுக் கம்பனி அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாகாணசபை அதிகாரங்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது!

### அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவிப்பு

மாகாணசபைகளின் அதிகாரத்தை எதிர்காலத்தில் மாற்றியமைப்பது குறித்து, அரசாங்கம் கவனம் செலுத்திவருவதாக - மாகாணசபைகள் அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்கள் - புதிய மாற்றத்தின்படி பிரதேசசபைக்கு வழங்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

மாகாணசபைக்கும், தமது அமைச்சிற்கும் ஒதுக்கப்படும் நிதியை பிரதேசசபைக்கு வழங்க உத்தேசித்துள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார்.

காலி மாவட்ட உள்ளூராட்சிமன்ற உத்தியோகத்தர்களின் மத்தியிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## அமெரிக்க விசா நடைமுறை அடுத்தவாரம் முதல் மாற்றம்!

அமெரிக்கத் தூதரத்தினால் வழங்கப்படுகின்ற தற்போதைய விசா நடைமுறைகளில் புதிய மாற்றங்கள் அடுத்தவாரம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

அட்டவணைப்படுத்தப்பட்ட நேர் முகப்பரீட்சைகள் ஊடாக, விசா அனுமதிக்கான வேலைகள் இடம்பெறவுள்ளன. விசா விண்ணப்பதாரியின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது தொடர்பாக பரிசீலித்துக் கூறுவதற்கு முன்னரைவிட, கூடுதலான காலம் எடுக்கும் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் பாதுகாப்பை அதிகரிப்பதற்காகவும், விசா வழங்குவதில் உலகளாவிய ரீதியில் ஒரு சீரான நடைமுறையை மேற்கொள்வதற்காகவுமே, இந்தப் புதிய நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்பிருந்த விசா நடைமுறைகளில் பல தளர்வுகள் காணப்பட்டன. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய நடைமுறையின்படி, விசாவிற்கு விண்ணப்பிப்பவர் பிரத்தியேக நேர் முகப்பரீட்சைக்கு அவசியம் தோற்ற வேண்டும்.

## இலங்கை நிலைவரம்பற்றி ஆராய அமெரிக்க அதிகாரி வருகிறார்!

### யாழ்ப்பாணம், திருமலைக்கும் விஜயம்

இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகள் சம்பந்தமாக ஆராய்வதற்கு, அமெரிக்காவில் உள்ள சபந்தா நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஜோதா வலன்க் அடுத்தவாரம் கொழும்பு வருவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கும் இவர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சிப் பிரமுகர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கை நிலைவரம்பற்றி அறிந்துகொள்வதற்காக, இங்கு வரும் அமெரிக்க சிரேஷ்ட அதிகாரி இவராவார்.

ஜோன் வலன்க்- அமெரிக்க 'யு.எஸ்.எயிட்' பத்திரிகையின் ஆசிரியரும், பி.பி.சி. நிறுவனத்தின் விமர்சகருமாவார். இவர், இந்த நிறுவனத்தின் ஆசியப் பிராந்திய ஆலோசகராகவும் செயற்பட்டுவருகின்றார்.

## வட-கிழக்கு இடைக்கால நிர்வாகசபைக்கு எழுபத்தேழு அமைப்புகள் எதிர்ப்புக் கொடி!

### தேசிய பிக்குகள் முன்னணி தலைமையில்

வடக்கு - கிழக்கின் இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு எதிராக, 77 அமைப்புகள் இணைந்து செயற்படவுள்ளதாகத் தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில், தேசிய பிக்குகள் முன்னணி நடத்திய கூட்டத்தில்- வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகசபையை ஏற்படுத்தல், வடக்கு - கிழக்கைத் தனித்தனியாகப் பிரிப்பது, நோர்வே நாட்டினதும் - மேற்குலக நாடுகளினதும் ஆக்கிரமிப்பை அகற்றுவது போன்ற விடயங்கள், இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றைத் தயாரித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகாநாயக்க தேரர்களிடம் சமர்ப்பிப்பதென்றும், கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

## லண்டனிலுள்ள சிங்கள மக்களிடம் இலங்கை நிலைவரம் பற்றி பிரசாரம்!

### சிஹல உறுமய பிரமுகர்கள் செல்கின்றனர்

(கொழும்பு)

சிஹல உறுமயவின் பிரதித் தலைவரும், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான எச்.எம்.ஜி.பி. கொட்டகதெனியவும், சிஹல உறுமயவின் பிரதிச் செயலாளருமான உதய கமன்விலவும், இலங்கையில் தற்போதைய நிலைவரம் தொடர்பாக, லண்டனிலுள்ள சிங்கள மக்களிடம் விரிவாக எடுத்து விளக்குவதற்காகப் பிரிட்டனுக்குச் செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் 9 ஆம் திகதி லண்டனில் இவர்களின் கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லண்டனிலுள்ள சிஹல உறுமய கிளையின் அழைப்பின் பேரிலேயே, இவர்கள் அங்கு செல்லவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாக்கிய பஞ்சாங்கப்படி குரு பகவான் கடக ராசியிலிருந்து, சிம்ம ராசிக்கு கடந்த 23 ஆம் திகதி 6.29 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப்படி கடந்த 30 ஆம் திகதி பகல் 12.03 மணிக்கும் இடம்பெயர்கிறார். இவர் 15.08.2004 வரை இந்த ராசியில் இருப்பார். இதையொட்டி 12 ராசிகளுக்கும் உரிய பலன்கள் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன.**



## மீனம்



(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

இருப்பதை வைத்துக்கொண்டு காலத்தைத் தள்ளவேண்டியதுதான். புதிய தொழில் முயற்சிகள் எவையும் உங்களுக்குப் பலன்தராது என்பதை நினைவில் கொள்ளுங்கள். 'சும்மா இருப்பதே சுகம்' என்ற நிலையில் காலம் பார்த்துக் காத்திருங்கள்.

நீங்கள் அரசியல்வாதி என்றால், நாணலாய் வளைந்து கொடுத்துத் தப்பித்துக் கொள்ளுங்கள். உங்கள் புகழ் மங்குகின்றகாலம் இது. உங்கள்மேல் அதிகாரிகள் உங்கள் புகழைச் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இவர்களால் உங்களுக்கு ஓயாத தொல்லைகள். தேவையில்லாத இடமாற்றங்கள், பதவி இறக்கம் தோன்றும். அரசுப் பணியாளர், தனியார் பணியாளர்களுக்குத் தற்காலிகப் பணிநீக்கம் பெறநேரிடும். காலம் பார்த்துப் புலி பதுங்குவதைப்போல, பணிவாயும், பதுங்கியும் இருங்கள்.

மாணவர்களுக்குக் கடின உழைப்பே மூலதனம். படிப்பு விடயத்தில் பாதிப்பு ஏற்படலாம்.

வியாபாரிகளுக்குப் பெரும் முயற்சியினால் அழகுப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் சிறு இலாபம் தரும். குடும்பத்தில் நிம்மதிக் குறைவு ஏற்படும். பெரும் துன்பங்களுக்குப் பின் திருமண உறவுகள் ஏற்படும்.

தெய்வீகத் திருப்பணியில் கலந்துகொண்டு, மன அமைதி பெறுங்கள். உங்கள் உடல்நலம், மனநலத்தில் கவனம் கொள்ளுங்கள். இரண்டும்கெட வாய்ப்புக்களுண்டு.

மீனத்தை மிகவும் கொடுமை செய்கிறார்கள் சனியும், குருவும். என்ன செய்வது. வாழ்க்கையில் இன்ப, துன்பம் சகஜம்தானே. அவர்கள் கொடுத்த இந்தப் பரிசை இப்போது ஏற்றுக்கொண்டு, சிரித்த முகத்துடன் எதிர்கொண்டால், அடுத்த பெயர்ச்சியில் அவர்கள் வழங்கப்போகும் நல்லதைப் பெறக் காத்திருக்கலாம்.

மீன ராசிப் பெண்களே, உங்களுக்கு இந்தக் காதல், கத்தரிக்காய் எல்லாம் வேண்டாம். உங்கள் உடலே உங்கள் காதலனுக்குப் பிரதானம். அது கிடைத்துவிட்டால், ஓடிவிடுவான் உங்கள் காதலன். நீங்கள் அவனை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பெற்றவர்களுக்குக் கட்டுப்பட்ட நல்ல மகளாக நடந்துகொள்ளுங்கள். அவர்கள் சொல்லும் மணமகனுக்கு மாலையிட்டால், குருபகவான் தொல்லை ஏதும் செய்யாமல், வாழ்த்தி மகிழ்வார். குருபகவான் தியானம் உங்களைக் காப்பாற்றும். நகை, பணம் சேர வாய்ப்பு மிகவும் குறைவுதான்.

### ஆடி

உங்கள் இளைய சகோதர, சகோதரிகளுக்கு கூடாத காலம். அவர்களுடைய உதவி உங்களுக்குக் கிடைக்காது. உங்கள் உதவியும் சென்றடையாது.

### ஆவணி

இது உங்கள் தாயாருக்குக் கூடாத காலம். அவர்கள் காலில் அடிபட வாய்ப்புண்டு. எந்தப் புதிய தொழில் முயற்சியிலும் ஈடுபடாதீர்கள். உங்கள் சுகம் அறவே கெட்டுப்போகும். பல கஷ்டங்கள் தோன்ற வாய்ப்புண்டு. ஆமையாய் அடங்கியிருந்து விடுங்கள்.

### புரட்டாதி

உங்கள் பெண் குழந்தைகளின் உடல்நலத்தை நன்கு பராமரித்து வாருங்கள். பராசக்தியை இம்மாதத்தில் துதித்து வாருங்கள். துன்பங்கள் விலகும்.

### ஐப்பசி

உங்கள் வாக்கு கடுமையாகும். இம்மாதம் முதல் திகதியிலிருந்து, உங்கள் வாக்கில் கடுமை கலக்கிறது. எக்காரணம் கொண்டும் யாருடனும் விவாதம் வைத்துக் கொள்ளாதீர்கள். இது உங்களோடு வாதம் புரிபவருக்கு ஆகாது. உங்கள் நாக்கைக்கொண்டு யாரையும் திட்டாதீர்கள். உங்கள் நாக்கிற்குத் தீமையைப் பலிக்கவைக்கும் தன்மை ஏற்பட்டுள்ளது. நாகாத்து வாழுங்கள். மற்றவர்களையும் வாழவிடுங்கள்.

### கார்த்திகை

இச்சமயம் குருவின் சஞ்சாரம் உங்களுக்குக்கூடாது. உங்கள் பகைவருக்கு உங்களால் நற்காலம். உங்கள் வருவாய் - உங்கள் எதிர்பார்ப்போருக்குச் சென்றுசேரும். இது ஒரு வியப்பு. உங்கள் ஜாதகத்தில் குரு நீசம் பெற்றிருந்தால், உங்களுக்கு நீரிழிவு நோய் தோன்றும் வாய்ப்புள்ளது. உங்கள் பகைவர்கள் உங்களை எதிர்த்தால், சிறைத்தண்டனை பெறுவார்கள். உங்களுக்கு அமையும் பணியாட்கள் உத்தமர்களாக விளங்குவர்.

### மார்கழி

உங்களில் சிலருக்கு விஷப்பூச்சிகள் தீண்டுதல் ஏற்படும். முயற்சிகள் தோல்வியைத்தரும். வாதம், வயிற்றுக் கோளாறு போன்ற நோய்கள் தோன்றும்.

### தை

மகா விஷ்ணுவிடம் ஈடுபாடு தோன்றும். பெருமாள் ஒருவர்தான் உங்களுக்குத் துணை. உங்கள் துன்பங்களுக்கு விடிவெள்ளி அவன் மட்டுமே. இலக்கிய ஞானம் தோன்றும். படைப்பு ஆற்றல் பெருகும். இதுவரை வாழ்வியல் கணக்கைக் கற்றுக்கொண்டீர். அது தந்த பாடம் அநேகம். கலைத்துறை, ஜோதிடத்தில் ஈடுபாடு தோன்றும்.

### மாசி

அறிவுபூர்வமான நண்பர்கள் தோன்றுவார்கள். விடிவெள்ளி தோன்றிவிட்டது. வீடு, வாகனம் போன்ற வசதிகள் தோன்றும். ஆடை, ஆபரணங்கள் பெருகும்.

### பங்குனி

அரசின் உதவிகள் கிடைக்கும். வண்டி வாகன யோகம் கிடைக்கும். பகைவரை வெல்லும் வன்மை தோன்றுகிறது. வசதி வாய்ப்புக்கள் பெருகும். ஆனால், நீங்கள் ஒரு அவசரக்காரர். இப்போது உங்களுக்கு ஆத்திரம் அதிகம் தோன்றும். எனவே, கிடைத்ததை இழக்க நேரிடலாம் கவனம்.

### சித்திரை

இந்த இரண்டு மூன்று மாதங்களில் உங்களுக்கும் சாஸ்திரப் பயிற்சி ஓரளவு ஏற்பட்டுள்ளது. நீங்கள் மற்றவர்களுக்கு இப்போது சாஸ்திரம் சொல்வீர்கள். நன்கு பேசும் ஆற்றல் பெற்றுவிடுவீர்கள்.

உங்கள் பேச்சில் ஓர் ஆளுமைத் தன்மை தோன்றும்.

### வைகாசி

உங்கள் தந்தையார் உடல்நலம் சீர்கேடு அடையும். குடும்பத்தில் ஒற்றுமை குறையும். உங்கள் பரந்த மனப்பான்மை குறுகும். இளைய சகோதர, சகோதரிகளுடன் சண்டை தோன்றும். போக்குவரத்துப் பயணங்களில் விபத்துத் தோன்றலாம். தேவையற்ற பயணங்களைத் தவிருங்கள்.

### ஆனி

உங்களின் கல்விக்குத் தடை ஏற்படும்.

தாய் - தந்தையர் இருவரின் உடல்நலமும் குன்றும். சிலர் தந்தை தந்த சொத்தை விற்கும்படி இருக்கும். அரசின் பகை தோன்றும். கிரிமினல் வழக்குகள் தோன்றும்.

◆◆




(வடமராட்சி கிழக்கு)

**பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 41 ஆவது ஆண்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்வில், மன்ற உறுப்பினர் சீதாதேசி சூர்தலிங்கம் உரையாற்றுவதையும், மன்றத் தலைவி சூரியகுமாரி, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஷ்ணசாமி ஆகியோரைப் படத்தில் காணலாம். (17)**

# லஞ்ச ஆணையாளர் இல்லை; 900 முறைப்பாடுகள் தேக்கம் !

(கொழும்பு)

ஆணையாளர் எவரும் லஞ்ச விசாரணை ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படாமையால், ஆணைக்குழுவுக்கு முறையிடப்பட்டுள்ள 900 முறைப்பாடுகள் விசாரிக்கப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஆணைக்குழுவின் ஆணையாளராக இருந்த ரி.என்.அபேவீரவின் மாற்றத்திற்குப் பின்னர், லஞ்ச விசாரணை ஆணைக்குழுவுக்கு ஆணையாளர் எவரும் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த வருடம் ஆணைக்குழுவுக்கு 1011 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று, ஆணைக்குழுவின் 2001 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிள் - சைக்கிள் மீசாலையில் விபத்து, மூவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

மீசாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில், ஆசிரியர் உட்பட மூன்று பேர் காயமடைந்தனர்.

இவர்களில் ஆசிரியரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக, வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில் மீசாலைச் சந்திக்கு அண்மையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஆங்கில ஆசிரியரான பி.பாலநாதா (வயது 35), அவருடன் சென்ற இத்தாவில்-பளையைச் சேர்ந்த ஆறுமுகம் புண்ணியமூர்த்தி (வயது 45) என்பவரும், சைக்கிளில் சென்ற சங்கத்தானையைச் சேர்ந்த வாரித்தம்பி நவரட்ணம் (வயது 50) ஆகிய மூவருமே காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரியிலிருந்து - முகமாலையை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுக்குக் குறுக்கே, சைக்கிளில் சென்றவர் சென்றபோதே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

(121,111)

# நாவற்குழி உணவுக் களஞ்சியம் ஜி.ரி.இசற் நிதியால் புனரமைப்பு!

நாவற்குழியிலுள்ள உணவுக் களஞ்சியத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள மூன்று கட்டடத்தொகுதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிதியுதவியுடனேயே, இந்தப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக - இந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தக் கட்டடப் புனரமைப்புக்காக ஜி.ரி.இசற் நிறுவனத்தால், 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கட்டட நிர்மாணப் பணிகளை- யாழ்.மாவட்டச் செயலகத்தைச் சேர்ந்த பொறியியலாளரே மேற்பார்வை செய்துவருவதாக ஜி.ரி.இசற் நிறுவனம் அறிவித்துள்ளது.

## மரக்கன்றுகள் விநியோகம்

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு - வன பரிபாலனசபையினரால் மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

மரம் நடுகையை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

மரக்கன்றுகள் தேவையான பாடசாலை அதிபர்கள் - மரங்களின் இனம், எண்ணிக்கை என்பவற்றை உடனடியாக அறியத்தருமாறு, வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (122)

## மாவடிப் பிள்ளையார் வருடாந்த உற்சவம்

(மீசாலை)

மீசாலை கிழக்கு திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 11 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. உற்சவ காலங்களில் தொடர் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

# காலாவதியான பிஸ்கட்டுகள் வண்ணார்பண்ணையில் மீட்பு!

வண்ணார்பண்ணைப் பகுதியில் வர்த்தக நிலையமொன்றில் வைக்கப்பட்டிருந்த காலாவதியான பிஸ்கட் வகைகள், சுகாதாரப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமையன்று யாழ். மாநகரசபைச் சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது இவை கண்டுபிடிக்கப்பட்டன.

இதன்போது, 38 கிறீம் கிரேக்கர் பிஸ்கட் பக்கற்கள் உட்பட மேலும் பல பிஸ்கட் பக்கற்கள் மீட்கப்பட்டன.

இவ்வாறான காலாவதியான பிஸ்கட்களை விற்பனை செய்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் எச்சரிக்கை செய்யப்பட்டார்.


வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY



முதலாவது அகவையில்



பெயர் : யு.யுஜிகன்
முகவரி : சாந்தி இல்லம், கரவெட்டி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



-------------------
பெற்றார் ஒப்பம்

நாவல்

இலக்கியச்சோலை

# எனது ஊரிலும்தான்

(சென்றவாரத் தொடர்ச்சி)

போரினால் நலிந்து, இடிந்து, நொருங்கிய கட்டடங்கள் நிறைந்த வீதிகளிலே, வீட்டுக்கு வீடு இழப்புடன் நடைப்பிணமாகத் திரிந்த. இந்த மனித ஜீவன்களுக்குக் கடைசியிலே தீர்வு வந்துவிட்டதா?

கடைசியில் மோதல் தானாகத் தொடங்கியது.

"தம்பி இந்தியா போறது பற்றி முதலாளி பிறகொண்டும் கதைக்கேல்லையோ?"

இரவு அம்மா கேட்டாள்.

"இன்னும் இல்லை. கொஞ்சநாள் செல்லும்போல கிடக்கு" நான் மெல்லப் பேச்சை இழுத்தேன்.

"உனக்குப் போக விருப்பமில்லையோ? எங்களைப் பற்றி யோசியாதை. நீ போனாலென்ன, நிண்டாலென்ன, நாங்கள் அனுபவிக்கிறது அனுபவிக்கிறதுதானே?

ஏன் உனக்கு வாற சந்தர்ப்பத்தை விடுகிறாய்? போய் என்ன கனகாலமே நிக்கப் போறாய்?"

"ஒரு வருஷம் நிப்பம், பிறகு பாத்துச் செய்யலாம்."

ஒரு வருஷம் தானேயடா தம்பி. அது டக்கெண்டு ஓடிப்போயிடும்."

மறுபடியும் யோசனை என்னைப் பிடித்தது.

"என்ன சின்னப்பிள்ளை மாதிரிக் குழம்பிறாய்? அவனவன் ஓடித் தப்பிற வழியைப் பாக்கிறான். நீயெண்டா...?"

"போறது கஷ்ரமில்லையம்மா. உவங்கள் முதலாளிமாரை நம்பி வெளிக்கிடுகிறதுதான் பயம். தங்கட அலுவல் முடியறவரையும் நல்லா நடிப்பாங்கள். காரியம் முடிஞ்சுதோ, எங்களைத் தெருவில விட்டிட்டு வந்திடுவாங்கள்."

"உன்ர முதலாளி நல்ல ஆள்தானே. கனக்க யோசிக்காமல், போற அலுவலைப் பார்." அம்மா முடிவாகச் சொல்லிவிட்டார்.

எல்லோரும் உற்சாகப் படுத்தினார்கள். கனக்க யோசிக்காமல் போற அலுவலைப் பார்" அம்மா முடிவாகச் சொல்லி விட்டாள்.

"நல்ல கதைப் புத்தகம் வாங்கலாம்" அண்ணாவுக்குப் புத்தகப் பைத்தியம். கடைசித் தங்கைக்குக் கோலம் போடுவது பிடிக்கும். நல்ல கோலப் புத்தகம் வாங்கலாமாம்.

"நல்லதாப் போச்சு. இந்தியாவில நல்ல மருந்து சம்பந்தமான புத்தகம் வாங்கலாம் அனுப்பிவை" என்றார் என் அடுத்த தங்கை. அக்கா மட்டும் அமைதியாக இருந்தாள். இவர்களுக்கு இப்படி ஆசை என்றால், தம்பி சும்மா இருந்துவிடுவானா? "அண்ணை - தியானம், யோகாசனம் பற்றிய புத்தகங்களைக் கனக்க இருக்கு மறந்து போகாதை", இனி அடுத்திருப்பது அம்மாதான்.

"நல்ல 'நூல்' சாறி அங்க எடுக்கலாம். கட்ட நல்லாயிருக்கும்", அப்பாதான் இடையில் அநியாயமாய்ப் போய்விட்டார். அவரும் இருந்தால் இதைத்தான் சொல்லியிருப்பார்.

"நல்ல கரைபோட்ட வேட்டி, சால்வை எடுத்து அனுப்பு, கோவிலுக்குக் கட்டலாம்.

மனதில்தான் எத்தனை ஆசைகள் வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாமம் அங்குபோய்க் கொஞ்சம் கொஞ்சமாய் நிறைவேற்றலாமே.

இரண்டு நாட்கள் வேலைக்குப் போகவில்லை. நாங்கள் இருந்த பகுதியில் ஊரடங்குச்சட்டம் போட்டிருந்தாங்கள். முதல் நாளிரவு தேடுதல் நடவடிக்கையின்போது - ஏற்பட்ட மோதலின் பலன் இது.

இப்படித்தான் அன்றொருநாள் இரு பகுதியினருக்கும் மோதல் தொடங்கியது. யாரும் நினைத்துகூடப் பார்க்கவில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஒருவித பதட்டநிலை நிலவியது.

"கோட்டையைச் சுற்றிப் பெடியள் 'சென்றி' போட்டுவிட்டாங்கள்."

"என்ன விசரே? கோட்டையில் இப்ப சிங்கள ஆமி இல்லையே!"

"காலையிலை யாழ்ப்பாணம் போகேக்க கதைச்சினம் இரண்டு பகுதிக்கும் ஏதோ பிரச்சினை எண்டு."

"இரவு யாழ்ப்பாணத்தில பத்திரிகை அலுவலகத்தில ஆக்களை வெளியில விட்டிட்டுக் குண்டு வைச்சிட்டாங்களாம்."

இப்படிக் கதைகள் தொடங்க, மக்கள் முகங்களிலே பீதி படியத் தொடங்கியது.

அதனோடு ஒரு செய்தியும் வந்தது.

"கடலிலை வைச்சுக் கனபெடியளை சிங்கள ஆமி பிடிச்சுக்கொண்டு போட்டுதாம். அப்படி ஒப்பந்தத்தை மீறிச் செய்யப்படாதெண்டு இயக்கம் அடிக்கத் தொடங்கிவிட்டுது."

"என்ன மறுபடியும் சண்டை தொடங்கிவிட்டுதா? கடைசிவரைக்கும் சண்டை வரவிடமாட்டினம். எப்படியும் பேசித் தீர்த்துப் போடுவினம். இவ்வளவு நாளும் கஷ்டப்பட்டது சண்டைபிடிக்கவோ? உது விசர்க்கதை. கடைசிவரையும் சண்டைவராது. சின்னத் தம்பியர் சந்திக்கடையிலே சொல்லிக் கொண்டிருந்தார். அவருக்கு வியாபாரம் அழிந்துவிடுமே என்ற கவலை.

அந்தநேரம் எல்லோரும் வீட்டில் அடங்கியிருந்தோம்.

இரவு ஒலிபெருக்கியில் அந்தச் செய்தியைப் பெடியள் மூலை முடுக்கெல்லாம் அறிவித்தார்கள்.

"தவிர்க்கமுடியாத காரணத்தால், நாங்கள் அவர்களுடன் சண்டை செய்யும் நிலை வந்துவிட்டது. பிடிக்கப்பட்ட எம் தளபதிகளைக் கொழும்புக்குக் கொண்டுசெல்ல முயலும் போது, அவர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள்", மோதல் தொடங்கிவிட்டது.

எங்கள் தலையெழுத்து மீண்டும் மனித உயிர்களுக்கு விலைபேசியாகிவிட்டது. நிலையாக இருந்த கட்டடங்களும், சொத்துக்களும் அழியும்நிலை வந்துவிட்டது. தெருநாய்கள்போல் மனிதர்கள் சுடப்பட்டார்கள். வீதிகளிலே எஞ்சிய எலும்புக்கூடுகள் மண்ணுக்கு உரமாகின. பலர் எங்கே? எந்த இடத்தில் மோதல் நடக்கிறது என்று தெரியாமல், இடையில் அகப்பட்டு மாண்டு போனார்கள். அகதிகளாகக் கோவிலிலே தஞ்சமடைந்தார்கள்.



விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டார்கள். இருந்த ஒரு நம்பிக்கையும் இல்லாமற் போய்விட்டது.

அவருக்கும் எங்களில் அக்கறை இல்லை.

சண்டை இன்று நின்றுவிடும், நாளை நின்றுவிடும் என்று செய்தி பரிமாறிக்கொண்டார்கள்.

இறுதியில், யுத்தவேகம் குறைந்து கொண்டு வந்தது. சந்திக்குச் சந்தியென எங்கெங்கே 'சென்றி'கள் போடஇயலுமோ, அங்கெல்லாம் போட்டுக்கொண்டார்கள். ஊரடங்கு இல்லாத வேளைகளில் மட்டும், மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற வீதிகளுக்கு வருவார்கள். பின்னர், வீட்டினுள் முடங்கிவிடுவார்கள். உண்மையில், எங்களின் நலன் காக்கத்தான் வந்தார்களா? அல்லது....? யாரிடம் சொல்லி ஆறுதல் பெறுவது. இதெல்லாம் நெஞ்சில் நிலைத்துவிட்ட சம்பவங்கள்.

இரண்டு நாட்கள் வேலைக்குப் போகக் கஷ்டமாக இருந்தது. அவ்வளவிற்கு மனம் குழம்பிப் போய்க் கிடந்தது. இந்தியா விடயம் மனதை அரித்துக்கொண்டிருந்தது. எனக்கு ஏற்கனவே பாஸ்போட் இருந்தது, மிகவும் உதவியாக இருக்கும் போலத் தோன்றியது. கடைசியிலே போகவேண்டிய நிலைதான் வந்துவிடுமோ...?

காலை வேலைக்குப் போக ஆயத்தப்படுத்தும்போது - அம்மா சொன்னா. "காந்தன் வீட்டுப்பக்கம் நீ போகேல்லையே? ஆளையும் இந்தப் பக்கம் காணேல்லை." "போகத்தான் வேணும். முந்திப் பக்கத்தில இருந்தினம். பிரச்சினையிலை இடம்பெயர்ந்து இப்ப இருக்கிற இடமும் தூரந்தான். பாப்பம்... நாளைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே. போவம். வழியில போய் வாறதுதான் பிரச்சினை."

"பிரச்சினைதான் என்னசெய்யிறது? நல்ல பொடியன், நாளைக்கு நிலைமையப் பார்த்துப் போவன்" என்றாள் அம்மா.

"என்னம்மா வெள்ளைக் கொடியைக் காணேல்லை! ஆர் எடுத்தது?" உவள் தங்கச்சி எடுத்துப்போட்டாள். கடைக்குத்தான் போனவள். இப்ப வந்திடுவாள்."

வீதியிலே பச்சை உடைகள் நடந்து போயின. இரவு ரோந்து முடிந்து, திரும்பிப் போகிறார்கள்போலும்.

"தம்பி ஒண்டு சொல்ல மறந்துபோனன். 'சென்றியில' நிண்டவங்கள் சொல்லிப்போட்டுப் போறாங்கள், எங்கட வீட்டுப் பக்கம் ஆக்கள் வந்து போயினமாம், கவனமா இருக்கட்டாம். அதுதான், நான் சொந்தக்காரர் ஒருவரையும் இந்தப் பக்கம் வரவேண்டாம் எண்டு சொல்லப்போறன்." அம்மா ஏக்கத்துடன் என்னைப்பார்த்துச் சொன்னாள்.

"ஏன் தம்பி அவங்கள் ஆக்களில சந்தேகப்படுகிறாங்களோ?"

"அப்படித்தான் இருக்கும்."

தங்கை கடையிலிருந்து வந்துவிட்டாள். வெள்ளைக் கொடியை வாங்கிக்கொண்டேன்.

கடைக்குப் போனவுடன், முதலாளியின் மகன் சொன்னார். "இந்தக் கிழமைக்குள் போகலாம் என்று இருக்கிறன். என்னையும் ஆயத்தப்படுத்தவேணும். போகேக்க காசு தாறன்."

நான் ஒன்றும் பேசாமல் நின்றேன்.

"எனக்கு உம்மைமாதிரி நம்பிக்கையான ஆள்தேவை. அதுதான் உம்மைக்கொண்டு போறன். பயப்படாமல் வாரும். கொஞ்சக்காலம்தானே".

முந்தி இவரை நம்பிச் சில வேலைகளில் ஈடுபட்டபோது, ஏற்பட்ட சிரமம்தான் ஞாபகத்திற்கு வந்தது.

" வீட்டில கதைச்சுப்போட்டுச் சொல்லிறன்..." என்று இழுத்தேன். கதைக்கிறதுக்கு ஒண்டுமில்லை. பிறகு வந்து காசை வாங்கிக்கொண்டுபோம். அவர் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

எனக்கு மனம் வேலையில் ஓடவில்லை.

மாலை முதலாளியின் மகனிடம் பணம் வாங்கிக்கொண்டு, கிளாக்கர் ஐயாவுடன் திரும்பிக்கொண்டிருந்தேன். பிரதான வீதியின் சந்தியிலே, இராணுவச் சோதனை நடந்து கொண்டிருந்தது. அவர்களுக்கிடையே தெரிந்த எம்மவர் சிலர், கைது செய்வதில் மும்முரமாக உதவிக்கொண்டி ருந்தனர். அன்று அகப்பட்ட இருபது பேரில், நானும் ஒருவனாக இருந்தேன். கிளாக்கர் எவ்வளவோ எடுத்துக் கூறியும், அவர்கள் கேட்பதாக இல்லை. எல்லோரையும் உள்ளே அடைந்து விட்டார்கள். அன்றிரவு நான் வாங்கிய அடிகள் வாழ்நாளில் அனுபவித்திராதவை. முதலாளியின் மகன் கொடுத்த பணத்துடன் மனநிம்மதியையும், நான் பறிகொடுக்கவேண்டியதாயிற்று.

மறுநாட்காலை எம்மை விடுவித்தபோது, இந்தியாவிற்குச் சென்றுவிடுவதென்றே நான் தீர்மானித்துவிட்டேன்.

குளிர்ந்த காற்று முகத்தில் அடித்தது.

வாகனங்கள் எங்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தன. நேரம் பத்து மணிக்கு மேல் இருக்கும். ஓட்டோ வேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

"எப்படி இருக்குது தமிழ்நாடு", முதலாளியின் மகன் என்னைப் பார்த்துக் கேட்டார்.

நான் என்ன சொல்வது? கொடுத்துவைத்த சனங்கள். இந்த ஆர்ப்பாட்டங்கள், அமளிகள் எங்களுக்கு எப்போது வரும்?

சின்னக் குழந்தைபோல வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தேன். இந்த நேரத்தில் எங்கள் ஊர்ப்பக்கம் எல்லோரும் நித்திரையில் இருப்பார்கள். எங்கோ துப்பாக்கி வேட்டுகள் கேட்கும். நாய்கள் இடைவிடாமற் குரைக்கும். நித்திரை கலைந்துபோகும்.

ஓட்டோ எங்கெல்லோ சுற்றிவிட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றது.

மூன்று மாடிக் கட்டடம், நான்கு பக்கத் தடுப்புச் சுவர்களுக்கு மத்தியில் அடங்கிக் கிடந்தது.

விளக்கு வெளிச்சத்தில் "சாந்தி அபார்ட்மென்ட்" என்ற ஆங்கில எழுத்து பிரகாசித்தது. கொண்டுவந்த பையைத் தூக்கிக்கொண்டு வாசலை அண்மித்தபோது, உட்கார்ந் தபடி, அரைத்தூக்கத்தில் இருந்த இரவுக் காவலாளி சட்டென்று எழுந்தார்.

"வாங்க சார். ஊர்ல இருந்து இப்பதான் வர்றீங்களா?" என்றபடி முதலாளியின் மகனின் பையைத் தூக்கிக் கொண்டு படியேறிவந்தார்.

A பிரிவில், 4 ஆம் இலக்கம் பொறிக்கப்பட்ட கதவினைத் திறந்து உள்ளே போனோம். முதலாளியின் மகன் அறைவிளக்கைப் போட்டார். சிலந்தி வலையோடு தூசு படிந்து கிடந்தது. இரவுக் காவலாளி போய்விட்டார்.

அறையைக் கூட்டிப் படுக்கத் தீர்மானித்தபோது, ஒரு பெண்மணி உள்ளே வந்தாள்.

"என்ன இப்பதான் வர்றீங்களா?"

"இப்பதான் வந்தனாங்கள் செட்டியார் இல்லையோ?"

அவர் வர நேரமிருக்கு. ஏதாவது தண்ணி எடுத்து வரட்டுமா?

"பச்சத்தண்ணி செம்பில தாங்கோ"

அந்தப் பெண் தண்ணீர் தந்துவிட்டு எதிர்வீட்டுக்கு போவது தெரிந்தது.

"இவதான் எங்கட பஸ் பாட்னர் செட்டியாரின் மனுசி.. எதிர்வீடு தான் உமக்கு பிரச்சினை இல்லை.

காலையிலே கூட்டிப்பெருக்கி, குளித்து விட்டு வெளியே வந்தபோது முதலாளிக்கு தெரிந்தவர்கள் சுகம் விசாரித்தார்கள்.

"என்ன சார் இன்னும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை?"

"உங்களுக்கெல்லாம் பிராப்ளம் இல்லையோ?"

(தொடரும்)

# நூல் அகம்

## வன்னி ஊற்று



யாழ்ப்பாண பல்கலைக்கழக, வவுனியா வளாக கலை கலாசார மன்றமும், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து வழங்கியுள்ள ஓர் இனிய தமிழ் இசைவிருந்து 'வன்னி ஊற்று' இசை நாடா/தட்டு. இதில் இசைக்கப்பட்டுள்ள பாடல்கள் கொண்ட தொகுப்பு ஒரு சிறு நூலாக வெளியிடப் பட்டுள்ளது.

பெருமிதத்துக்குரிய இம்முயற்சி எமது மண்ணின் தமிழ் மெல்லிசைப் பாடல் உருவாக்கத்தில் பல வகைகளிலும் முக்கியத்துவமும், கவனமும் பெறுகின்றது. தமிழ்மணி அகளங்கன், கவிஞர் சோ.பத்மநாதன், கந்தையா ஸ்ரீகணேசன், வ.சுப்பிரமணியம், செ.குணரத்னம், க.கோகுலதாஸ், அ.நிஷாந்தன் ஆகியோரின் பாடல்கள், வவுனியாவைச் சேர்ந்த சோமரட்ணம் ஜெயச்சந்திரனின் இசையமைப்பில் இந்நாடாவில் பதிவாகியுள்ளன.

இதில் இடம்பெற்ற பத்துப் பாடல்களும், பல நல்ல கவிதைக்கான அம்சங்களைத் தம்மிடத்தே கொண்டு திகழ்வது ஒரு தனிச்சிறப்பு.

சோ.பவின் 'புலரும் பொழுதில்' மற்றும் 'தாய் இழந்தவளோ' எனும் பாடல்களும், கந்தையா ஸ்ரீகணேசனின் 'தேடிய தேட்டங்களே' வரிகளும், நிஷாந்தனின் 'நிழலாக வருவேனடி' மற்றும் 'அழகிய பூவின் கண்கள்' ஆகியனவும் இசையாலும், பொருளாலும், குரலாலும் நினைவிற்தங்கி விடும் பண்போடு திகழ்கின்றன.

செல்வி உசேனி சிறிதரன், நிஷாந்தன் ஏஞ்சல், ராதிகா, கல்பனா, அலெக்ஸ்கரன், சிவமைந்தன், கீர்த்தனா ஆகியோரின் குரல் வளம் அனுபவமிக்க பாடல்களுக்கு இணையாக விளங்குகின்றது. இப்பாடல்களின் சிறப்பு- இவை சமகால [illegible]களின் வாழ்நிலை, மனோநிலை என்பவற்றினைப் பிரதி [illegible]க்கும் பாடுபொருட்களைக் கொண்டிருக்கிறது.

இது இப்பாடல்களின் சிறப்பை ரசிகர்கள் மத்தியில் [illegible]செய்யும் அம்சமாக உள்ளது. 'நெஞ்சின் நெருடல்கள்' அகன்று 'ஒரு புதுவாழ்வை தரிசிக்க விளையும் மனசை எதிர்கொள்ளல் புலருகின்ற புதிய காலை வரவாய் அமையும்' இப்பாடல்கள், எமது மண்ணின் பாடல்களாய் என்றும் எதிரொலிக்கக் கூடியவை.ஏற்கனவே பல்கலைக்கழக மாணவன் யேசுதாசன் யஸ்ரினின் இசையமைப்பில் வெளியான 'வன்னி ஓடை', 'வன்னி அருவி' ஆகிய இசை நாடாக்களை தொடர்ந்து வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தை சேர்ந்த யோ.ஜெயச்சந்திரனின் இசையில் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து உருவாக்கிய வன்னி ஊற்று இசைநாவை மக்கள் வரவேற்பார்கள்.

-ந.சத்தியபாலன்

## இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்




தம் சொந்த மண்ணில் வாழமுடியாமல் அல்லலுற்றுக் கதிகலங்கி நிற்கும் தமிழர்களின் ஆறாத்துயர்களை வெளிப்படுத்துகின்றது எஸ்.பி.கிருஷ்ணனின் இக் கதைத் தொகுதி.

பிரான்ஸிலிருந்து வெளிவரும் ஈழநாடு, எரிமலை சஞ்சிகைகளிலும், வன்னியிலிருந்து வெளிவரும் வெளிச்சம் சஞ்சிகையிலும், சிரித்திரன், ஈழமுரசு, ஈழசுதந்திரன் ஆகியவற்றில் இக்கதைகள் வெளிவந்துள்ளன.

சொந்தமண்ணில் அமைதியாக வாழ முடியாமல் தமிழகம் சென்று - அங்கும் அகதி முகாம்களில் வாழமுடியாமல், மேலதிகாரிகளின் அனுமதியுடன் சொந்த மண்ணிற்கு சென்றவர் கதையை 'வானமே கூரை' கதை கூறுகிறது.

தமிழ்நாட்டில் கோயில்களைப் பார்க்கச்சென்றவர்கள், அங்குள்ள பக்தர்கள் கைகூப்பி வணங்கி நிற்பதைக்கண்டு, பைத்தியக்காரர்களைப்போல கற்சிலைகளைப் பார்த்துக் கொண்டு திரும்பியவர்களின் கதையை, 'கலைஞன்' எடுத்துரைக்கின்றது.

1995 இல் இடம்பெற்ற வரலாற்று இடப்பெயர்வால்- தென்மராட்சியில் வந்து தங்கி, அமைதியாய் வாழ்ந்த ஒருவரின் கதை 'ஓ தென்மராட்சி' என்பதாகும்.

சுதந்திரமடைந்த இலங்கையில் சிங்கள இனத்தின் ஆலோசகர்களாக, வழிகாட்டிகளாகச் செயற்பட்ட தமிழர்கள் நிலையை தமிழகத்துப் பெரியவர் ஒருவரின் அனுபவத்தோடு விளக்குவது, 'நன்றியுணர்வு' என்ற கதையாகும்.

காது கேட்கவில்லை என்று, டொக்டரிடம் சென்ற நோயாளியை டொக்டர் கேட்கும் கேள்விகள், அக்கேள்விகளுக்கு நோயாளி கூறும் பதில்கள், அதனால் வருத்தமடையும் டொக்டரின் நிலைமை, நோய்க்குரிய காரணம், அதிர்ச்சி என்ற கூற்றைக் கேட்ட நோயாளியின் நிலைமை - 'அதிர்ச்சி' என்ற கதையூடாக விளக்கப்படுகிறது.

குண்டுவீச்சுக் காரணமாக மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கும் அவலநிலையில், மக்களின் வீட்டினைக் கொள்ளையடிக்கும் திருடர்கள் பற்றி, 'எரிகிற வீட்டில்' என்ற கதையில் குறிப்பிடுகின்றார்.

மனிதர் இல்லாத வீட்டைச் சோதனையிடச் சென்ற அமைதிப்படையினரை, குரைத்து விரட்டுகையில் - வீரச்சாவடைந்த நன்றியுள்ள பிறவியைச் சொத்தாகக் குறிப்பிட்டு, 'நெஞ்சில் ஆழப்பதிந்த வடு' என்ற கதையில் தந்துள்ளார்.

விமானக் குண்டுவீச்சு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது - மாற்றுக்கட்சியினரால் தாக்கப்பட்ட இருவர் சந்தித்துக் கொள்கின்றனர். தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்களுடைய அனுபவப் பகிர்வாக, 'அரிதான அனுபவங்கள்' என்ற கதை விளக்குகின்றது. குடிப்பதால் ஏற்படும் கெடுதல்கள் 'குற்றம் புரிந்தவன்' என்ற கதையின் ஊடாக விளக்கப்படுகிறது.இக்கதைகளினூடாக - எஸ்.கிருஸ்ணனின் மனிதநேய மிக்க பண்பும், சிறுமை கண்டு பொங்கும் இயல்பும், மொழிப் பற்றினால் கவரப்பட்ட தன்மையும் புலப்படுவதைக் காண முடிகின்றது.

'என்னுடைய சிறுகதையில் போரினால் சிதைந்துள்ள மண்ணும், அதனால் அல்லற்படும் மக்களுமே பதிவாகியுள்ளனர். பல கதைகள் ஒரே பின்னணியில் அமைவது இதனால் தவிர்க்கமுடியாது'. இவ்வாறு ஆசிரியர் தனது உரையில் குறிப்பிடுவதையும் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

# கிழக்கும் மேற்கும்

## மூன்றாம் செழியன் - செல்வி நைற்றிங்கேல்



முருகு

நோயாளர்களுக்குத் தாயாக நின்று
சேவைகள் செய்யும் "தாதியர் சேவையைத்"
தரணிக்கு முதன்முதல் அறிமுகம் செய்தான் -
தமிழ்மன்னன் ஒருவன் கிழக்கினில் - முன்பு!
தாதியர் சேவையை வளர்க்கத் தொடங்கினார்
அரிவையர் ஒருவர் மேற்கினில் - பின்பு!!

அடுபோர்ச் செழியன் - இயல்தேர்ச் செழியன்
பசும்பு,ண் பாண்டியன் எனப்பல பெயர்பெற்ற
மூன்றாம் செழியன் - சித்திர மாடத்துத்
துஞ்சிய நன்மாறனின் இரண்டாம் புதல்வன்!
முடிசூடிக் கொண்டு சிலநாட்கள் மட்டுமே
அரசு இயற்றிய நன்மாறன் இறந்ததும்
இரண்டாம் மகனாம் மூன்றாம் செழியன்

மணிமுடி சூடியவன் - வயதினில் மிகவும்
இளையவனாக இவன் இருந்ததைக் கண்ட
சோழ மன்னனாம் பெருநற் கிள்ளி
சேர மன்னனாம் இரும்பொறை என்னும்
இருமன்னர் களுடனே வேளிர் எழுவரும்
இணைந்து கொண்டு செழியன் மீதினில்

படையெடுத் தவர்களின் கூட்டி ணைவுப்படை
மதுரையை நோக்கி விரைவதை அறிந்து
பாண்டியன் செழியன் வஞ்சினம் கூறித
தன்படை யுடனே பகைவரை எதிர்த்தான்!
கூடற் பறந்தலையில் நடந்த கடும் போரில்
சேரும் சோழரும் பாண்டிய மன்னனை

எதிர்கொள்ள மாட்டாது சோழநாட்டினுட்
புகுந்து கொள்ளவே - பாண்டியன் அவர்களை
விரட்டிச் சென்று தஞ்சை மாவட்டத்தில்
திருவாரு ருக்கு வடக்குப் புறமாக
எட்டுக்கல் தொலைவில் அமைந்திருக் கின்ற
"தலையாலங் கானம்" என்னுமோர் இடத்தில்


மோதிக் கொண்டதால் மூண்டகடும் போரில்
ஆயிரம் ஆயிரம் வீரர்கள் மாண்டனர்!
சேரமன்னனும் சோழமன்னனும் தம்முயிர் துறந்தனர்!
பாண்டியன் செழியன் வாகை சூடியான்!
தலையாலங் கானத்தில் வாகை சூடியதால்

" தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் "எனும்
பெயர்கொண்டிவ் வெற்றியைப் போற்றிப் பாடினர்
புலவர் கல்லாடனாரும் மாங்குடி மருதனாரும்
போர்க் களங்களில் போர் மறவர்கள்
சோர்வுற்ற வேளையில் அவர்களுக் கெல்லாம்
வீரஉரை களினால் உற்சாக மூட்டியும்
வீரமிகு சொற்களினால் புரிந்துணர் வூட்டியும்
போரை நடத்தினான் மூன்றாம் செழியன்!

(தொடரும்)

# கவிதைச் சோலை

## உன் நினைவோடு



நீ சிரித்த சிரிப்புக்கள்
இன்னும் காற்றலைகளில்
மிதந்தபடி ....
நீ உதிர்த்த சந்தோசங்கள்
இன்னும் எம்
நெஞ்சங்களில் ....
நீ நடந்த பாதைகளெல்லாம்
உன்பெருமையையே
சொல்கின்றன.
உன் வீரப் பிரதாபங்களெல்லாம்
இன்னுமே எதிரிகளை
பயமுறுத்திக் கொண்டேயிருக்கின்றன.
இறப்பிலே கூட
உன் எழில்
குறையவேயில்லை.
நீ
உறங்கியபோதுகூட
உன் கண்களிலே
உன் கனவு உறங்கவேயில்லை.
உன்னை எம்
மண்ணிலே விதைத்தபோது
எம் நெஞ்சங்களிலேயும்
விதைத்தோம்.
இன்னும் எம் ஈரவிழிகளிலே
உன்னையே சுமந்தபடி .....
உனது கனவுகளையும்
சேர்த்துத்தான்.

அ. சூரியன்

## நம்புதல்



காலடியில் வந்துமெல்ல ஸ்பரிசிக்கும் சிறுஅலைகள்
பாய் மரத்தை...நடுக்கடலில்
பாறிவிட வைக்கிறது!
பூக்களிலே மகரந்தச் சேர்க்கைசெய்யும் பூங்காற்று
பூக்களையும் மரங்களையும்
வேறொருநாள் சாய்க்கிறது!
எந்தன் குளிரை இழுத்துறுஞ்சி ஏப்பமிடும்
செங்கதிரின் வெப்பம்
சிறுபுழுவைத் தீய்க்கிறது!
எந்தனினைக் காண்கையிலே இனிமை தவழ்ந்துவர
புன்னகைக்கும் நீயும்
நினது சகாக்களும்... ஓர்
அந்தரப் பொழுதில் அறுத்தீராம் தாலிகளை!
யாரைத்தான் நம்புவதோ?
எனக்குத் தெரியவில்லை!
'உந்தனது' இதயத்தை நம்பலாமா?

## தார்

வெயிலிலே நன்றாய்ப் பொரிந்து கிடக்கிறது
தார் வீதி !
பாதம் தனைவைத்தாற் கொப்புழிக்கும்.
தார் ஒட்டிக்கொண்டால்
மரணவலி சுட்டுலுப்பும்
இரப்பர்ச் செருப்பும் இரணமாகச் சுட்டுத்தன்
எரிவில் என்னைக் 'கடிக்க' ...
எட்டி நடக்கின்றேன்.
உருகிய தாரின் குரூரம் எனை வறுக்க;
செருப்பும் அற...;
பொரிந்த தாரிற் பாதம் பொசுங்கித்
துடித்துப் பதைத்து தீமிதித்துப் புண்ணானேன்.
'ஐம்பத்து எட்டில்'
கொதித்த தார்ப் பீப்பாயில்
'சங்கமித்த' தமிழ்மகனின் வலியினிலே
நானுமின்று
கொஞ்சம் அனுபவித்த 'கொடுப்பினை'யில் நடக்கின்றேன்.

த. ஜெயசீலன்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பூணை கண்ணை மூடிக்கொண்டால்
உலகம் இருண்டுவிடுமா?*

*- பழமொழி*

# நமது நோக்கு

## புரிந்தால் சரி!

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படுவதனூடாகவே - இந்தப் பிரதேசங்களில் போரினால் சீரழிந்த பகுதிகளைப் புனரமைக்க முடியும் என்ற, விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு அமைவாக -

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள யோசனைகள், புலிகளின் பரிசீலனையில் இருக்கின்றன. இது தொடர்பாக விரிவாக ஆராய்வதற்கு - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்டிக் நாடொன்றுக்கு செல்லவுள்ளதாகவும், அங்கு கலாநிதி அன்ரன் பாலசிங்கம், உருத்திரகுமார் போன்றோருடன் இணைந்து அது தொடர்பாக ஆராயவுள்ளதாகவும், தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைகளில் குறைபாடுகள் இருக்கின்றபோதிலும், அது குறித்து விரிவாக ஆலோசிக்கவுள்ளதாகவும், இதன் பின்னர் தமது சார்பில் புதிய யோசனைகள் அனுப்பப்படும் என்று, அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக யோசனைகளில் குறைபாடுகள் இருக்கின்றபோதிலும், அதனைப் பரிசீலித்து - தமது சார்பில் யோசனை ஒன்றை முன்வைக்கப் புலிகள் தயாராக இருக்கின்ற நிலையில்-

மறுபுறத்தே தென்னிலங்கை அரசியற்களத்தில் என்ன நிகழ்ந்துகொண்டிருக்கின்றது? புலிகள் என்ன கேட்கிறார்களோ - அதை எதிர்ப்பது, புலிகளை யார் ஆதரிக்கிறார்களோ - அவர்களைத் தேசத்துரோகி என்று பட்டம் சூட்டுவது என, சில சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் முனைந்துநிற்கின்றன.

ஜே.வி.பி ஒருபுறம், சிஹல உறுமய மறுபுறம் என பேரினவாதத்தைக் கக்கிக்கொண்டிருக்க, சிறிலங்கா சுதந்திரக்கட்சி - 'நானும் விட்டேனா பார்' என்ற தோரணையில், இடைக்கால நிர்வாக யோசனைக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் நேரம் ஒரு கதையும், இடத்துக்கு ஒரு பேச்சுமாக, இந்த விடயத்தைக் கையாண்டு வருகின்றார்.

முதலில், இடைக்கால நிர்வாக யோசனைகளை - அமைச்சரவையில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறவேண்டுமென வலியுறுத்திய சந்திரிகா, பின்னர் - அது பயனற்றது என்று தெரிவித்ததும், திருத்திய திட்டவரைபை மட்டும் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தால் போதுமென்று அறிவித்து வருகிறார்.

ஆனால், இவ்வாறு கூறிய சில நாட்களுக்கு பின்னர் மீண்டும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கும் கருத்துக்கள் - இடைக்கால நிர்வாகத் தீர்வு யோசனைகளை அமைச்ச ரவையில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் -

புலிகளுக்கு அனுப்பிய அதே திட்ட வரைபே தனக்கும் தரவேண்டும் என்றும், அதை அரசாங்கம் செய்தால் தான் - புலிகள் தொடர்பாகவோ, வேறெந்த விடயம் தொடர்பாகவோ பிரதமருடன் பேசமுடியும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேநேரம், ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் - புலிகள் தமது யோசனைகளை சமர்ப்பிப்பர் என்று தமிழ்ச்செல்வன் வெளியிட்ட கருத்துக்களை வரவேற்றிருப்பதுடன், இந்த யோசனைகளை தம்மால் ஆராயமுடியும் என்றும் கூறியிருந்தார்.

இவ்வாறு வடக்கு - கிழக்கு இடைக்கால யோசனைகள் குறித்து, பல்வேறு தரப்பிலிருந்தும் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் இந்த யோசனைகளுக்கு ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது கட்சியும் தெரிவித்து வரும் கடும் எதிர்ப்புக் குறித்து பல்வேறுபட்ட விமர்சனங்களும் கிளம்பியுள்ளன.

குறிப்பாக, ஜப்பானிய அரசு - இந்த விடயத்தில் இராஜதந்திர ரீதியாக அழுத்தத்தை சந்திரிகா மீதும், எதிர்க்கட்சி மீதும் செலுத்திவருவதாக, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகா தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் என்பது தவிர்க்கமுடியாதது என்ற கருத்து - சர்வதேச சமூகத்திடம் வலுவடைந்துள்ள நிலையில், உள்ளூரில் சில பேரினவாத சக்திகள் ஓலம்போட்டு - இதில் குழப்பத்தை விளைவிக்க முயல்வது - இலகுவான விடயமாக இருக்கப்போவதில்லை.

இதையேதான், ஜப்பானிய நிலைப்பாடு தெளிவுபடுத்தியிருக்கிறது. இடைக்கால நிர்வாக யோசனைகளை எதிர்க்கும் சக்திகள் இதனைப் புரிந்துகொண்டால் சரி.

# இலங்கை பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வு; கனேடிய அரசாங்கம் பூரண நம்பிக்கை

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி வழியில் தீர்வு கிடைக்கும் என்று, கனேடிய அரசாங்கம் உறுதியாக நம்புகின்றது என்றும் இந்தச் சமஷ்டித் தீர்வின்மூலம் இலங்கையில் வாழும் சகல இனங்களும் ஒற்றுமையாக வாழமுடியுமென்றும், கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில்கிரேம் தெரிவித்துள்ளார்.

கனடாவில் பில்கிரேமின் தொகுதியில் கடந்த 31 ஆம் திகதி நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வொன்றைக் காண்பதற்காக நோர்வேயுடன், கனடாவும் இணைந்து செயற்படுகின்றது.

சமஷ்டி அடிப்படையில்தான் இத்தீர்வு தங்கியிருக்கிறது. சமஷ்டி வழியில் விரைவில் அரசியற்தீர்வொன்று ஏற்படுமென்பதில் கனடா உறுதியாக இருக்கிறது என்றும், அவர் தெரிவித்தார்.

இலங்கையில் வடக்குப் பகுதியில் நடைபெறும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில், கண்ணிவெடி பாதுகாப்பு கவச உடைகள் இவ்வைபவத்தின்போது, இலங்கைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

# திடீர் தேர்தலை எதிர்கொள்வது பற்றி தேர்தல் ஆணையாளர் ஆராய்கிறார்!

திடீர் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டால், அதை எதிர்கொள்வதற்கான நடைமுறைகள் பற்றி ஆராய்வதற்காகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க - மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்களுடன் முக்கிய சந்திப்பொன்றை நிகழ்த்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் திடீர் பொதுத் தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பு விடுக்கப்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும், இதனால் சகல மாவட்டங்களிலும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் குறுகியகால அவகாசங்களுடன் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருக்குமாறு, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கேட்டுக்கொண்டதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், அடுத்த வருடம் நடத்தப்பட வேண்டிய [illegible]ண சபைகளுக்கான தேர்தல்கள் குறித்தும், இந்தச் சந்[illegible]ில் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

# சமுர்த்தி முகாமையாளர், உத்தியோகத்தருக்கு அடுத்தவருடம் முதல் சம்பள, பதவி உயர்வுகள்!

## திறைசேரி அங்கீகாரம் கிடைத்தது

(கொழும்பு)

சமுர்த்தி முகாமையாளருக்கும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம், வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது. இவர்களுக்குப் பதவி உயர்வுகளும் வழங்கப்படவுள்ளதுடன், புலமைப்பரிசில் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கான அனுமதியைத் திறைசேரி வழங்கியுள்ளது.

சமுர்த்தி அமைச்சினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்தின் அடிப்படையில், சிறந்த சேவைப் பதிவுகளைக் கொண்டவர்களுக்கு மட்டுமே வருங்காலங்களில் பதவி உயர்வுகளும், சம்பள ஏற்றமும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

18 இலட்சம் சமுர்த்தி உதவி பெறுபவர்களின் - சமூக பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக 1024 சமுர்த்தி வங்கிச்சபைகளில் - 24 ஆயிரம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், 2050 சமுர்த்தி முகாமையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த 26 ஆயிரத்து ஐம்பது உத்தியோகத்தர்களும் மேற்படி செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்துக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

திருப்திகரமான செயல்திறன்கொண்டவர்களுக்கு இரண்டு சம்பள ஏற்றங்களை வழங்குவதற்கான சாதக நிலைமை பற்றி, சமுர்த்தி விவசாய கால்நடை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க கவனஞ்செலுத்தியுள்ளார்.

இவற்றுக்கு மேலதிகமாக வீடமைப்புக் கடனாக 2 இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

மேலும் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து சிறந்த 30 பேர் தெரிவுசெய்யப்பட்டு, புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு இந்தோனேசியாவில் விசேட பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது.

சிறந்த முகாமையாளர், சிறந்த அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறந்த பிரதேச செயலாளர், சிறந்த மாவட்டச் செயலாளர்களும், பிரதேச மாவட்ட தேசிய மட்டத்தில் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இவற்றுக்காக ஏப்ரல், மே, ஜுன் மாதங்களுக்கான செயலாற்றுகை மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளது.

# உடுத்துறை மகா வித்தியாலய மைதானம் புனரமைப்படுகிறது

(ஆழியவளை)

புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர்களின் நிதியுதவியுடன், உடுத்துறை மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

பழைய மாணவர் சங்கத்தினரால் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் இவ்விளையாட்டு மைதானத்திற்கு, வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள் மூன்று இலட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளனர்.

இவ்வளவு காலமும் இந்த மைதானம் மணல் பகுதியானதால், மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டார்கள். இவர்களைக் கருத்திற்கொண்டே பழைய மாணவர் சங்கம், இவ்விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்புச் செய்துவருகிறது. (122)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு கூரைத்தகடுகள் விநியோகம்!

முல்லை மாவட்டத்தில் 19 வருட காலமாக இடம்பெயர்ந்து வாழும் 160 குடும்பங்களுக்கு முதன்முறையாகக் கூரைத்தகடுகள் வழங்கப்பட்டன.

கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, தென்னைமரவடி ஆகிய கிராமமக்கள் கடந்த 1984 ஆம் ஆண்டு தொடக்கம், இடம்பெயாந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு அரச உணவு நிவாரணம் தவிர்ந்த, வேறு எவ்வித உதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லை.

முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வைத்து - கொக்கிளாய் கிராமத்தில் 45 குடும்பங்களுக்கும், கொக்குத்தொடுவாய் கிராமத்தில் 75 குடும்பங்களுக்கும், கருநாட்டுக்கேணியில் 15 குடும்பங்களுக்கும், தென்னைமரவடிக்கிராமத்தில் 25 குடும்பங்களுக்கும் மேற்படி கூரைத்தகடுகள் வழங்கப்பட்டன. (122)

# யாழ்.குடாநாட்டிலுள்ள 75 பாடசாலைகளுக்கு 'யுனிசெப்' நிறுவனம் சுகாதார, குடிநீர் வசதிகள்!

யுனிசெப் நிறுவனத்தினர் - யாழ். மாவட்டத்திலுள்ள 75 பாடசாலைகளுக்கு சுகாதார வசதிகளையும், குடிநீர் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளனர்.

கல்வித் திணைக்களத்தின் பாடசாலைகள் வேலைகள் பகுதிகளினூடாகச் செயற்படுத்தவுள்ள இத்திட்டத்திற்கு, இவ்வருடம் சுமார் 1 கோடியே 10 இலட்சம் ரூபாவை யுனிசெவ் நிறுவனம் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் வலிகாமம் கல்வி வலயத்தில் 18 பாடசாலைகளும், தீவகம் கல்வி வலயத்தில் 15 பாடசாலைகளும், யாழ். கல்வி வலயத்தில் 15 பாடசாலைகளும், தென்மராட்சி கல்வி வலயத்தில் 12 பாடசாலைகளும் சுகாதார, குடிநீர் வசதிகளைப் பெறவுள்ளன.

மேற்படி பாடசாலைகளுக்கு ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான மலசலகூடங்கள் அமைத்தல், தண்ணீர்த்தாங்கி, கிணறுகள் அமைத்தல், நீர் இறைக்கும் இயந்திரங்கள், நீர் விநியோகம் என்பவற்றை அமைத்துக் கொடுப்பதுடன், ஏற்கனவே பழுதடைந்துள்ளவைகளைத் திருத்திக் கொடுக்கவும் உள்ளது. (122)

# அரச படைத்தரப்புகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திய பிரிட்டிஷ் இராணுவ நிபுணரின் கருத்து!

## தெற்குத் திசையினிலே...

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

இடைக்கால நிர்வாகம் வடக்கு - கிழக்குக்கான தற்காலிக தீர்வாக அமைவதற்குள் பல்வேறு சிக்கல்கள் அதில் எழுந்துள்ளன. வடக்கு - கிழக்கு, 1987 ஆம் ஆண்டுமுதல் இணைந்த மாகாணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. அன்று அதை எதிர்த்தவர்களும்


சந்திரிகா

பி[illegible]அதை மறந்துவிட்டனர். ஆனால், இன்று வடக்கு - கிழக்குக்கான இடைக்காலத்தீர்வு அமைவதற்குள், அந்த இணைப்பும் ஒரு விடயமாகப் பேசப்படுகிறது.

இதில் முக்கியம் வாய்ந்த விடயம் என்னவெனில், முன்னர் இந்த அணியில் பெரும்பான்மை இனமான சிங்கள இனமே, வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்தது. இன்று அதனுடன் இணைந்து, சிறுபான்மை முஸ்லிம் சமூகத்திலுள்ள ஒரு சிறு அமைப்பு அதனை எதிர்க்கிறது.

இந்த நிலையில் - தென்னிலங்கையில் இன்னும் சில கட்சிகள்- நடைமுறைச் சமாதான முன்னெடுப்பு, அதில் இடைக்கால நிர்வாக அமைப்பு என்பவற்றை எதிர்க்கின்றன.

ஜே.வி.பி. எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிஹல உறுமய ஆகியன, இந்த முன்னெடுப்புகளுக்கு எதிராகத் தமது எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றன. இதற்காக, அந்தக் கட்சிகள் பல வழிகளிலும் சிங்கள மக்களைத் தூண்டிவிடும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றன.

மக்கள் விடுதலை முன்னணி வாரம் ஒருமுறை பொதுக்கூட்டங்களையும், ஊடக மாநாடுகளையும் நடத்தி, தமது எதிர்ப்புப் பிரசாரத்தை முன்கொண்டு செல்கிறது. இதன்மூலம் மக்கள் விடுதலை முன்னணி பல தகவல்களையும், மக்கள்முன் தெரிவித்துவருகிறது. இதில் ஒரு தகவலாகவே அண்மையில் வெளியான "சர்வதேச அமைதிப்படை இலங்கைக்கு வருகிறது" என்பது அமைந்திருந்தது. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் - தற்சமயம் நடைமுறையிலுள்ள போர்நிறுத்த உடன்படிக்கையை மீறாதிருக்கச்செய்வதில் இன்னமும் வெற்றிகாணவில்லை. இதற்குப் பிரதான காரணம் - குறிப்பிட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக குழுவுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படாமையாகும்.

மறுபுறத்தில் - இந்தப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு 'ஸ்கண்டிநேவிய' நாடுகளை மையமாகக் கொண்டிருப்பதால், இலங்கையின் சமாதான நகர்விற்கு எவ்வித பாதிப்பும், அதாவது அரசியல் நகர்விற்கு எவ்வித பாதிப்பும், ஏற்பட்டுவிடக்கூடாது என்பவற்றையும் அந்தக் குழு கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. இது நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களையும், சமாதானப்படுத்தும் ஒரு முயற்சி எனக்கொள்ளலாம். இந்த நிலையில், தற்போதைய சூழ்நிலையின்படி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை, இரண்டு தரப்புகளுமே குற்றஞ் சுமத்தும்நிலை ஏற்பட்டுள்ளது, கவனிக்கத் தக்க விடயமாகும்.

ஒருபுறத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் தமது குரங்குப்பாஞ்சான் முகாம், இரண்டு கப்பல்கள் சர்வதேசக் கடலில் தாக்கப்பட்டமை உட்பட்ட, பல்வேறு சம்பவங்களில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உரியமுறையில் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டைச் சுமத்தியிருந்தனர். மறுபுறத்தில்- இராணுவத்தரப்பு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு - தமிழீழ விடுதலைப் புலிகளைப் போர் ஒன்றுக்குத் தயார்படுத்தும் நிலையை ஏற்படுத்துகின்றது என்ற குற்றச்சாட்டை சுமத்திவருகிறது. கடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சிகளுக்கு இடமளித்தல் உட்பட்ட பல்வேறு விடயங்களில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு-தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி வருவதாகவும், இதனால் இராணுவத்தினரின் 'மனோவலிமை' குறைந்து வருவதாகவும்,


ஐ.நா.அமைதிப்படைக்கான பயிற்சியை முடித்த படையினருக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

படைத்தரப்புக் கூறுகிறது.

இரண்டு தரப்பிலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்பில், நல்லெண்ணம் விலகிப்போய்க்கொண்டிருக்கிறது. எனவேதான், சர்வதேச அமைதிப்படை ஒன்றுகுறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக, லண்டனிலிருந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச அமைதிப்படை விவகாரம் இலங்கையின் இறைமைக்குக் குந்தகத்தை ஏற்படுத்திவிடும். அது நாட்டின் பிரிவினைக்கு வழி வகுத்துவிடும். குறிப்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு, தமது தனி ஈழத்தை வெற்றிகொள்ள இந்த சர்வதேச அமைதிப்படை ஊன்றுகோலாய் அமைந்துவிடும் என, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் கூறியுள்ளார்.

சிஹல உறுமய கட்சியைப் பொறுத்தவரையில், இந்த விடயத்தை அது பெரிதுபடுத்திக்கொள்ளவில்லை. மக்கள் விடுதலை முன்னணி தமக்குக் கிடைத்த தகவலை அடிப்படையாகக் கொண்டே, "சர்வதேச அமைதிப் படை" என்ற பேச்சை ஆரம்பித்திருக்கிறது. ஆனால், சிஹல உறுமய - இந்த அமைதிப்படை விவகாரம் அரசாங்கத்தின் தரப்பில் இருந்து வெளிவரட்டும் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

அதன் பின்னரே, அது தொடர்பாகக் கருத்துக்களைக் கூறலாம் எனவும் சிஹல உறுமய தெரிவிக்கிறது. யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற விடயமே, தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தடையை ஏற்படுத்தும் விடயமாக இருந்துவருகிறது.

இந்த நிலையில், சர்வதேச அமைதிப்படை அங்கு செல்லுமானால், தமிழீழ விடுதலைப் புலிகளால் அதற்குள் மிகவும் இலகுவாக ஊடுருவமுடியும். அதேநேரம் யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும் எனவும் மக்கள் விடுதலை முன்னணி கருதுகிறது.

இது இவ்வாறிருக்க, படைத்தரப்பிலிருந்து வெளியான பிந்தியசெய்தி, உண்மையில் படைத்தரப்பை அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது. அதைவிட, சிங்கள இனவாதக் கட்சிகளைக் கோபங்கொள்ளச் செய்திருக்கிறது.

இலங்கை அரசுக்கு இராணுவத்தைப் போர் ஒன்றுக்கு கட்டியெழுப்பும் ஏதுநிலை குறித்து, ஆலோசனை வழங்கப் பிரித்தானியாவின் முன்னாள் தளபதி ஒருவரை அழைத்திருக்கிறது. அவரும் இலங்கைக்கு வந்து, பல்வேறு யுத்தப்பகுதிகளுக்குச் சென்று, நிலைமைகளை அவதானித்து வந்தார். இதன் பின்னர் அவர் வெளியிட்டுள்ள கருத்து, அரசாங்கத்துக்குப் பாரிய சங்கடத்தை ஏற்படுத்திவிட்டது.

"இலங்கை இராணுவம் மீண்டும் ஒரு போரில் ஈடுபடும் நிலையில் இல்லை. எனவே, அதனை முடியுமானால் சமாதானப் படையாக மாற்றுங்கள்" என பிரித்தானிய இராணுவ அதிகாரி - இலங்கை அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்றே தகவல்கள் வெளியாகியுள்ளன. உண்மையில், இந்த ஆலோசனையை இலங்கை அரசாங்கமோ அல்லது இராணுவத்தரப்போ எதிர்பார்த்திருக்கவில்லை.

அதேநேரம், பிரித்தானிய இராணுவ அதிகாரியின் கருத்தை ஏற்றுக்கொண்டால்கூட, தற்போதைய சமாதான நகர்வு மாத்திரமே இடம்பெறுகின்ற சூழ்நிலையில் இலங்கைப் படையினரை, அமைதிப்படையினராக மாற்றுவதோ அல்லது ஐக்கிய நாடுகள் சமாதானப் படையில் சேர்த்து, ஏனைய நாடுகளின் அமைதிப் பணிகளுக்கு அனுப்புவதோ உசிதமான ஏற்பாடல்ல என்ற கருத்தையே படைத்தரப்பும், அரசாங்கமும் கொண்டுள்ளன.


விமல் வீரவன்ச

எனினும், சமாதான சூழ்நிலையில் இதற்கு முன்னர் இலங்கைப் படையினரின் குடாநாட்டுப் பிரசன்னத்தைக் குறைக்கும் முகமாக, ஐக்கிய நாடுகள் அமைதிப்படையில், அவர்களை இணைத்துக்கொள்வதற்கும், ஈராக்கிற்கு - அமெரிக்காவால் கோரப்படும் அமைதிப பணி நடவடிக்கைகளுக்கான படைப்பிரிவிற்கு, இலங்கைப் படையினரை அனுப்புவதற்கு அரசாங்கம் முனைப்பு மேற்கொண்டு வந்தது. இடைக்கால நிர்வாகம் மற்றும் போர் ஓய்வு உடன்படிக்கையின் நிலைமை இவ்வாறிருக்க, மத்திய அரசியலில் என்ன நடக்கிறது? இக்கேள்விக்குப் பதில் கூறப்போனால், சமாதான முன்னேற்றங்களே இல்லை என்றே சொல்ல வேண்டும்.

பொதுத்தேர்தலில் மக்களின் ஆணையைப்பெற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு, முன்னைய தமது தேர்தல் வெற்றியைக்கொண்டு, ஜனாதிபதியாக இருக்கும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தொடர்ந்தும் தலைவலியாகவே இருந்து வருகிறார். ஆனால், இந்தத் த்லைவலி தேசிய கொள்கையைப் பாதுகாப்பதற்காகவல்ல என்பது மாத்திரமே உண்மை.

பிரதம மந்திரி அமெரிக்கா சார்பாக நடந்துகொள்ளும் அதேநேரம், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இந்திய சார்பாக நடந்துகொள்கிறார் என்ற போக்கே தற்சமயம் முன்வைக்கப்படுகிறது.

எனவே, இலங்கை மக்கள் தற்போது இறைமைக்காக ஏங்கும் நிலைக்கு உட்பட்டுள்ளனர் என்பது மட்டுமே உண்மை. இதற்கிடையில், முக்கிய அமைச்சரின் தலைமையில் தேசிய அரசாங்க நிலைப்பாடு குறித்து, ஜனாதிபதியுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. இது இரகசியமாகவே இடம்பெற்று வருகிறது.

❖

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடு; இந்தியாவின் உதவியுடன் அதிகரிக்கத் திட்டம்!

## சாத்தியங்கள் குறித்து ஆராய மிலிந்த புதுடெல்கி செல்கிறார்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலான நிதியை அதிகரிப்பதற்கு - இந்தியாவின் உதவியை, இலங்கை அரசாங்கம் நாடியுள்ளது.

இது தொடர்பாகக் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கும் வகையில், பிரதமரின் ஆலோசனையின் பேரில் அமைச்சர் மிலிந்த மொறகொட, இந்தவாரம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு, இந்திய நிதி அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய, வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 50 லட்சம் ரூபா போதுமானதல்ல என்றும், இந்த நிதியினால் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளமுடியாது என்றும் - நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமரிடம் தெரிவித்ததையடுத்தே, பிரதமரின் ஆலோசனையின் பேரில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா - இலங்கைக்கு வழங்கும் கடன் திட்டத்தின்கீழ், தேவையான நிதியை உறுப்பினர்களுக்கு வழங்கமுடியுமா என்று ஆராயுமாறு-பிரதமர், அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் தெரிவித்ததையடுத்தே, அமைச்சர் மிலிந்த மொறகொட இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இதன்படி பன்முகப்படுத்தப்பட்ட நிதியை மேலும், 50 லட்சமாக அதிகரிக்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் இணக்கம் தெரிவித்துள்ளதையடுத்தே, அமைச்சர் மிலிந்த மேலதிக தீர்மானங்களை எடுக்கும் முகமாக, இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

# மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள்

பகுதி 6

(தொடர்ச்சி...)

## பேய்க்காய்ச்சல் (BRUCELLOSIS)

புறுசெல்லா அபோட்டஸ் (BRUCELLA ABORTS) என்னும் கிருமியினால் ஏற்படுத்தப்பட்டுப் பல நாட்கள் தொடர்ந்து காய்ந்து, மக்களிடையே பீதியை ஏற்படுத்திய நோய், பேய்க்காய்ச்சல் என அழைக்கப்பட்ட புறுசெல்லோலிஸ் (BRUCELLOSIS) என்னும் நோயாகும். சென்ற நூற்றாணடின் நடுப்பகுதிவரை இது ஒரு கிருமித்தொற்றினால் ஏற்படுகிறது என மக்கள் சந்தேகிக்கவில்லை. இது ஆலமரங்களின் கீழும், ஆலமர ஓரங்களிலும் நடமாடியோருக்கு ஏற்பட்டதை அவதானித்த மக்கள், இது ஆலமரங்களிலிருக்கின்ற பேய்களினால் ஏற்படுத்தப்படுவதாக நம்பினர். இதனால் - பேயோட்டல், உடுக்கு அடித்தல், வேப்பிலை அடித்தல், எலுமிச்சம் பழங்களை வெட்டுதல் போன்றவையே, இந்த நோய் நீக்கத்துக்கான நிவாரண நடவடிக்கைகள் என எண்ணிய மக்கள், அவற்றைச் செய்துகொண்டிருந்ததால் நோய் தொடர்ந்து பரவிக்கொண்டிருந்தது.

இந்த நோயை உண்டாக்கும் புறூசெல்லா அபோட்டஸ் கிருமி, கால்நடைகளில் கருச்சிதைவுகளை ஏற்படுத்துகின்றது. ஆலமரங்களின் கீழ் கட்டித் தொங்கவிடப்பட்டுவந்த, இளங்கொடிப் பொட்டலங்களின் மூலம் ஆலமரங்களின்கீழ் இக்கிருமிகள் சொரிந்தன.

ச.ஆ.கோபாலமூர்த்தி

(தொடரும்...)

# மக்களின் மருத்துவத் தேவையை பூர்த்தி செய்யும் நெடுந்தீவு தியாகதீபம் திலீபன் மருத்துவமனை



புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் - இராணுவ கட்டப்பாட்டுப் பிரதேசங்களுக்குள், அரசியற் பணியினை மேற்கொள்ளவென தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், தமிழர் தாயகம் எங்கும் வியாபித்தனர்.

இந்த வகையில் - பலதரப்பட்ட பெரும் இடையூறுகளின் மத்தியில் தீவகப் பகுதிக்குள் அரசியற் பணிக்கென தமது விடாமுயற்சியால் காலடி எடுத்துவைத்தனர். அதன் ஒரு அங்கமாகவே, 18.06.2002 அன்று நெடுந்தீவிலும் பணிபுரிய தங்கள் கால்பதித்தனர்.

இந்தவகையில், அரசியற்பணியினை மேற்கொள்ள வந்தவர்கள் தீவினது நிலைமையையும், மருத்துவத்துறையின் தன்மையினையும், மக்கள் நலனையும் கருத்திற் கொண்டு, அத்தியாவசியத் தேவையான மருத்துவ சேவையினை மக்களுக்கு வழங்க வேண்டுமென்ற ஒரு சீரிய நோக்குடன், 'தியாகதீபம் திலீபன்' மருத்துவசேவைப் பிரிவினர் தங்கள் மருத்துவ நிலையத்தை 04.08.2002 இல் வைபவ ரீதியாக நிறுவினர்.

அன்றிலிருந்து, இன்று வரைக்கும், மருத்துவப் போராளி பூவேந்தன் - தமது முழுநேரத்தையும், மக்களின் மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்வதிலேயே செலவிட்டு வருகின்றார்.

இந்த மருத்துவப் பிரிவில், நெடுந்தீவைச் சேர்ந்த சில சுகாதாரத் தொண்டர்களும், தங்கள் சேவையை போராளி மருத்துவர்களுடன், இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

மக்கள் - தனியார் மருத்துவ நிலையங்களில், பெருவிலை கொடுத்து வாங்கிய மருந்துகள் மற்றும் விஷக்கடி மருந்துகள் மட்டுமன்றி, முக்கியமான மருந்துகளை வழங்கி, மக்களைப் உயிராபத்துக்களில் இருந்து காப்பாற்றி, பல படிக்கற்களைத் தாண்டி, இன்று ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து, தனது பயணத்தில் பலபடி வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்ந்து செல்கின்றது.

இந்தவகையில் -

தற்போது மருத்துவசேவைப் பிரிவு, இயங்கும் கட்டடம் சிறிதாகவும், பாவனைக்கான தளபாட வசதிகள் இன்றியும்,நோயாளியைத் தங்கவைத்துச் சிகிச்சை செய்யக்கூடிய விடுதி வசதியும் இன்றியே, தனது மருத்துவ சேவையை - வசதிகள் நிறைந்த அரசாங்க வைத்தியசாலையின் சேவையை விட, திறம்படச் செய்து வருகின்றது.

இவ்வாறு, சேவையை விரிவுபடுத்தி - வசதிகளை மேம்படுத்துவதற்கென அண்மையில், 'தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை அபிவிருத்திக்குழு' என்ற பெயரில், அமைப்பொன்றை நெடுந்தீவைச் சேர்ந்த கல்விசார் சமூகத்திடமிருந்து தெரிவுசெய்து, அதன் மூலம் மருத்துவ சேவைப்பிரிவினை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மருத்துவசேவைப் பிரிவின் அனுசரணையுடன் - நடமாடும் மருத்துவசேவையை நடத்தி, அதன்மூலம் பலருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டமையும், அண்மையில் நடைபெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் - உயர்திருவிழா நடைபெற்ற மூன்று நாட்களுக்கு, நெடுந்தீவுப் போராளி மருத்துவர் பூவண்ணன் தலைமையிலான குழுவினர், முதலுதவி நிலையம் ஒன்றை நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

*ஒரு வருட சேவையில் ....*

*மருத்துவ சேவையை நிறுவும் நோக்குடன் வந்த விடுதலைப் புலிகளின் மருத்துவர்களால் - மேற்கொள்ளப்பட்ட விசேட மருத்துவ முகாமில், (01.08.2002 - 03.08. 2002 வரை) 699 பேர் சிகிச்சை யைப் பெற்றனர். இதில் 40 பேர் பற்சிகிச்சை பெற்றனர்.*

*04.08.2002 - 31.07.2003 வரையான காலப்பகுதியில் இங்கு 10,843 பேர் சிகிச்சை பெற்றனர்.*

*விசேட கண்சிகிச்சை முகாமின் போது, 50 பேர் இலவச மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொணடனர்.*

*நயினாதீவு - நாகபூஷணி அம்மன் ஆலயத்தின், இந்தவருட (2003) உயர்திருவிழாக் காலப்பகுதியில்,அவசர சிகிச்சை முகாமில் 65 பேர் சிகிச்சை பெற்றனர்.*

இந்தவகையில், நெடுந்தீவில் ஒரு மாவட்ட வைத்தியசாலையில் இருந்தும், அதற்கு ஒரு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படாமலும்,

**கண்ணன்**

சீரானசேவை கிடைக்காமலும், தவித்த [illegible]ந்தீவு மக்களுக்குக் கிடைத்த ஒரு[illegible] சாதமே 'தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை' என்பதனை, நெடுந்தீவு வாழ்மக்கள் எவரும் தம் உயிருள்ள வரைக்கும் மறக்க மாட்டார்கள் என்பது உறுதி.



# தேசியத்தலைவரின் தீர்க்கதரிசனமே தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை!

தீபகற்பத்தின் வடகோடியிலுள்ள, நெடுந்தீவு மக்களின் பிணிதீர்க்கும் கலங்கரை விளக்காக இயங்கிவரும் தியாகதீபம் மருத்துவ சேவையானது, தனது சேவையில் ஓராண்டினைப் பூர்த்தி செய்யும் மகிழ்வினை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பேருவகை அடைகின்றது.

தனது சேவையை ஆரம்பித்த குறுகிய காலத்தினுள்ளேயே - மக்கள் மத்தியில், பெருவரவேற்பையும் இப்பிரதேச வாழ்மக்களின் வாழ்வியலிற்கு ஆதாரமாகவும் அமைந்த ஒரு அமைப்பாகவும் மாறி, அது தன் சேவையை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளது.

கடந்த காலங்களில், நெடுந்தீவுப் பிரதேசம் போதிய - தொடர்ச்சியான வைத்திய வசதிகளின்றி அல்லற்பட்டுக்கொண்டிருந்தவேளை, எமது அரசியற்பணிப் போராளிகளிடம், மக்கள் தமக்குள்ள குறைகளை முன்வைத்தபோது, அது எமது தலைமையின் கவனத்திலெடுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதே, தியாகதீபம் திலீபன் மருத்துவமனை.

இராணுவ மற்றும் கடற்படைகளின் கெடுபிடிகளுக்கு மத்தியில், இப்பிரதேச வாழ் மக்களுக்கான சேவையினை - விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினர், வன்னியிலிருந்து மருத்துவ உபகரணங்களைக் கொண்டுவந்து தம்மாலான சீரிய பணியினைத் திறம்பட இரவு பகல் பாராமல் செய்து வருகின்றனர்.

தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனக் கண்ணோட்டத்துடன் அமைக்கப்பட்டதே எமது தியாகதீபம் லெப். கேணல் திலீபன் மருத்துவசேவை அமைப்பாகும். பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து, அவற்றையெல்லாம் முறியடித்துவென்ற எமது போராட்ட வாழ்வில், வெல்லப்பட்டது எதிரிகள் முகாம்களும், பகை அரண்களும், இராணுவப் பெருந்தளங்களும் மட்டுமல்ல, எதிரிக்கு நிகராகவே கொடிய பிணிகளுக்குள்ளாகியும், வதைக்கப்பட்டுவந்த எம்மை, ஆதரித்து வந்த மக்களை நேரில் தேடிச்சென்று - ஆதரித்து, ஒளடதமிட்டு, அவர்களோடு ஒன்றாகி 'எங்கட பிள்ளைகள்' என்று, வாய்மலர உறவாடியதுதான் இந்தத் தியாகதீபம் மருத்துவ சேவை.

**மருத்துவப் போராளி பூவேந்தன்**

எமது வடக்கு - கிழக்கு பிரதேசத்தில், 10 இடங்களில் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை, தனது பணியை வீச்சுடன் ஆற்றிவருகின்றது. அதன் ஒரு அங்கம்தான் நெடுநதீவுக்கான சேவை. இது இன்றுடன் ஓராண்டு சேவைக்களிப்பில் பூரித்து நிற்கின்றது. நெடுந்தீவுப் பிரதேசமானது, நாற்புறமும் உள்ள கடலோடு மட்டுமல்லாது, கடந்தகால பாராமுகங்களால், போதிய மருத்துவ வசதிகளின்றியும், போதிய போக்குவரத்து வசதியின்மை, ஆசிரிய வளப் பற்றாக்குறை போன்றவற்றோடும், அன்றாடம் எதிர்நீச்சல் போடவேண்டியுள்ளது.

அவர்களின் துன்பதுயரங்களில் பங்கெடுத்து, அவர்களைப் பிணியிலிருந்து விடுவித்து, எம்மக்கள் மனதில் மலரும் களிப்பினை, அவர்தம் முகத்தினூடாகத் தரிசிப்பதில் வரும் உணர்வையே, தனது சேவைக்குக் கிடைத்த அங்கீகாரமாகக் கருதி, தியாகதீபம் திலீபன் மேலும் தன் வீச்சோடு நடைபோடுகின்றது.

# நெடுந்தீவின் வைத்தியத்துறையில் ஒரு திருப்புமுனை

**தோ.டெவிட் (வயது62)**

எமது தீவகத்திலுள்ள மக்களின் வைத்திய வசதிக் குறைவை நிறைவு செய்வதற்கென ஆரம்பிக்கப்பட்ட வைத்தியசாலை இன்றுடன் ஓராண்டைப் பூர்த்திசெய்கிறது. அந்தவகையில் எமது வாழ்த்துக்கள்.



மக்கள் சேவையே மகேசன் சேவையென, தியாகதீபன் திலீபன் மருத்துவ சேவையினர், இரவு, பகல் பராமல் திறம்பட சேவையாற்றி வருகின்றமை கண்கூடு.

எழுந்து நடக்கமுடியாதவர்களுக்கு வைத்தியம் செய்யவென, அவர்களது வீடுகளுக்குச் சென்றே ஆற்றும் சேவையினை மறக்கமுடியாது.

தொடர்ந்து - பல வளர்ச்சியுடன் சேவையாற்றவேண்டும் என்பதே எமது ஆவல்.

**இராமநாதன் கனகம்மா (வயது 54)**

குறிக்கப்பட்ட நேரம் என்றில்லாமல், எந்தவேளையிலும் திலீபன் மருத்துவச் சேவைப் பிரிவுக்குச் சென்று மருந்தெடுக்கமுடியும். அத்தோடு, மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகளையும் பெறக்கூடியதாகவுள்ளது.



வைத்தியசாலை வைத்தியரிடம் கேட்கமுடியாது. ஆனால், போராளி மருத்துவரிடம் கேட்கலாம். வாட் வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அதுமட்டுமன்றி, இங்கு கொடுக்கப்படும் மருந்துகளை மக்களும், முழுமையாகப் பயன்படுத்திப் பயன்பெறவேண்டும். இங்கு கிடைப்பவை அரிய மருந்துகள். அத்துடன், மருந்து வழங்கும்போது கூட, பல வருத்தங்களுடன் செல்வோருக்கு, அனைத்து மருந்துகளும் வழங்காமல், உடலில் ஒவ்வாமை ஏற்படாத வகையில் சிறந்த முறையில் மட்டுப்படுத்தி, மருந்துகள் வழங்கப்படுகின்றது. அரசினர் வைத்தியசாலையை விட, இது சிறிதாக இருப்பினும் இதன்சேவை பெரியது.

**பிளாறிஸ் சகாயதாசன் (வயது 48)**

இந்தத் திலீபன் மருத்துவ சேவையில் பெரும் பயன் பெற்றவன் நான். பனைமரத்தில் இருந்து தவறிவிழுந்த என்னை, முதலில் இங்குதான் கொண்டுசென்று சிகிச்சை அளித்தனர். இந்தச் சிகிச்சையின் உதவியுடன்தான், நான் இன்று உயிருடன் வாழ்கின்றேன். போதிய வாட் வசதியின்மையால் மேலதிக சிகிச்சைக்கென, என்னை மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றபோது, அங்கு வைத்தியர் இல்லை.



ஆனால், போராளி மருத்துவர் அங்கும் வந்து, எனது நிலைமையைக் கவனித்து வந்தார். இவர்களது சேவையைக் கூட்ட இடவசதி போதாது. இருப்பினும், சிறந்த மருந்துகளைக் கொண்டு சேவையை நிறைவாகச் செய்கின்றனர். மேலும் சேவையை விஸ்தரிக்கவேண்டும். இவர்களது சேவை, எமது தீவுக்கு என்றென்றும் தேவை.

**இ.கந்தையா (வயது 75)**

திலீபன் மருத்துவமனை வந்தது, நெடுந்தீவின் வைத்தியத்துறையில் ஓர் திருப்புமுனை. இதன் ஆரம்பம் தொட்டு இன்றுவரை சிறப்பான பணியினையாற்றி, இன்று ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்வதையிட்டு மக்கள் பூரிப்படைகின்றனர். அரச வைத்தியசாலையில் - இன்று மீள் நியமனம் பெற்ற வைத்தியர் நியமிக்கப்பட்டும், பல நாட்கள் வைத்தியரின்றியே இயங்கியதும் உண்டு.



இந்த நிலையில், திலீபன் மருத்துவமனையினால், ஏராளமான மக்கள் பயனடைந்து வருகின்றனர். இவ்வரிய சேவையினைப் பாராட்டுகின்றோம். அத்துடன் - இரத்தம், யூரின் போன்றவற்றைச் சோதிக்கும் கருவிகளைக் கொண்டு ஆய்வுகள் செய்தால் நன்றாகவிருக்கும். மேலும், புதிய, கிடைத்தற்கரிய மருந்துகளைப் பெற்று மானிய விலையிலாவது மக்களுக்கு வழங்கவேண்டும்.

5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் போஷாக்கின்மை மற்றும் இவர்களின் உடல்நலம் தொடர்பாக வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் தீர்வுகாண, இந்த மருத்துவமனை ஆவன செய்யவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

**சவரிமுத்து கொலஸ்ரிகா (வயது 60)**

இந்த மருத்துவசேவை நிலையத்தில், நாங்கள் காசுக்கு வாங்கும் பல மருந்துகளை இலவசமாக வழங்குகின்றார்கள்.



எந்தநேரம் சென்றாலும் சிகிச்சை பெறக்கூடியதாக இருப்பதால், அவர்களது சேவை எமக்குத் திருப்தி தருகின்றது.

இருப்பினும் - விடுதி வசதியும் இருந்தால், இன்னும் சிறப்பாக இருக்கும். ஆனால், தற்போதுள்ள இடத்தில் இட வசதி போதாமலிருப்பது எமக்குத் தெரியும். ஆகவே, பெரிய வீடுகளை தேடிக் கொடுத்து, அதனையும் நிறைவேற்ற நாம் ஒத்துழைக்க வேண்டும்.

**திருச்செல்வம் - பிலோமினா (வயது 67)**

திலீபன் மருத்துவ சேவையினரது சேவை, எமது தீவுக்குத் தேவையானது. எந்தநேரத்தில் சென்றாலும் மருந்துகள் பெற முடிவதுடன், வீடுகளுக்குவந்துகூட மருந்துவம் செய்கின்றனர். அத்துடன், இலவசமாகக் கண்ணாடி வழங்கல் சேவையினையும் செய்துள்ளனர்.



மேலும், இந்த வைத்தியசேவையிலேயே வாட் வசதியொன்றை ஏற்படுத்தினால் தூரத்தில் இருந்துவரும் மக்கள், தங்கிநின்று மருத்துவ சேவையைப் பெறக்கூடியதாக இருக்கும். இவர்களது சேவை எமக்கு வேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ் மக்களின் பாதுகாப்புக்காகவே புலிகள் ஆயுதம் ஏந்தியுள்ளார்கள்!

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின் பாதுகாப்புக்காகவே விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தியுள்ளார்கள். நிரந்தரத் தீர்வு ஒன்று கிடைத்த பின்னரே, அவர்கள் ஆயுதத்தைக் கீழேவைப்பார்கள் என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் தெரிவித்தார்.

நேற்றுக்காலை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் - சமகால அரசியல் நிலைமைகள் பற்றி ஆராய்வதற்காக நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

### சமாதானப்...

இந்த நிலைமை தொடர்ந்து நடைபெற்றுவருவதால்தான், சமாதானப் பேச்சுவார்த்தை பலவீனப்படுத்தப்பட்டுவருகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை - யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கையளித்த மகஜரில்-

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை வருடங்கள் சென்றபோதிலும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மக்கள் வாழ்வுக்கான, இயல்பு வாழ்க்கை இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை.

மக்கள் இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில், மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பாது, பல்வேறு முகாம்களிலும் வாழ்கின்றனர்.

தற்போதைய சமாதான பேச்சுவார்த்தையில் தென்னிலங்கை மக்களே அதிகளவிலான நன்மையைப் பெற்றுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் கூறுகையில், தென்னிலங்கை அரசியலில் தமிழ்க் கூட்டமைப்பினைப்பற்றி, பல கருத்து முரண்பாடுகள் உண்டாகியுள்ளன.

விடுதலைப்புலிகள் ஆயுதத்தைக் கைவிட்டு முழுமையாக ஜனநாயகத்திற்கு வரவில்லை.

புலிகளுக்கு ஜனநாயக ரீதியில் பலத்தினை கொடுக்கவே, கூட்டமைப்புஉருவாக்கப்பட்டது. அதனால்தான், புலிகள் எங்களை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி எங்களைப் புலிகள் எனவும், நாங்கள் புலிகளுக்குப் பயந்து செயற்படுகின்றோம் எனவும் கூறியுள்ளார்.

நாங்கள் புலிகளுக்கு பயந்தவர்களானால் - எமது கட்சி அலுவலகத்தை மூடிவிட்டு எப்போதே சென்றிருப்போம்.

எமது கட்சி ஒற்றுமைக்கு உலை வைக்கும் செயலில் பத்திரிகைகள் செய்திகளை திரிபுபடுத்தி வெளியிடுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுதந்திரக்கட்சி -ஜே.வி.பி. கூட்டணி; நாளை மறுதினம் முக்கிய சந்திப்பு!

ஜே.வி.பி.யும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கூட்டணி அமைப்பது குறித்துக் கலந்துரையாடுவதற்கான முக்கிய கூட்டம் ஒன்று நாளை மறு நாள், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த உயர்மட்டக் கூட்டத்தில், இரு கட்சிகளும் இணைவதற்கான முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாகவும், கூட்டணி அமைப்பது உறுதிசெய்யப்பட்ட பின், நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பொதுச் சட்டங்கள், கொள்கைகள், தேர்தல் முன்னெடுப்புக்கள், கட்சியின உயர் பதவிகள், கட்சியின் செயற்பாடுகள் போன்ற பல விடயங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பில் இரு கட்சிகளும் இணைய முடிவெடுக்கப்பட்டால், அடுத்த வருட ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் எண்ணம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உள்ளதாக, உயர்மட்ட அரசியற் பிரமுகர் ஒருவர் கருத்துக் கூறியுள்ளார்.

இதற்கிடையில், இந்த இரு கட்சிகளும் இணைவதற்கான திட்ட வரைபில், ஏராளமான இழுபறிகள் உள்ளன என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

### இடைக்கால...

ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன் ஆகியோர் பங்குபற்றுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கிழக்குப் பகுதிக்கான விஜயத்தை மேற்கொண்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், இன்றுகாலை கிளிநொச்சிக்குத் திரும்புவார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### சுழிபுரத்தில்...

துறைமுகத்திலிருந்து 2 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலேயே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், சுழிபுரம் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## கே.சி.சி.சி.கிண்ணம் மானிப்பாய் பரிஷ் அணிக்கு

கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத் [illegible]ான் - கிரிக்கெட் போட்டியின் [illegible]யாட்டத்தில், மானிப்பாய் [illegible]அணி, யாழ்.பல்கலைக்கழக [illegible] 2 விக்கெட்டுக்களால் [illegible]று சம்பியனானது.

[illegible]்கலைக்கழக அணி 40 ஓவர்[illegible]ளில் 8 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்களையும், மானிப்பாய் பரிஷ் அணி 38 ஓவர்களில் 8 விக்கட் இழப்புக்கு 227 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

இப்போட்டியில், சிறந்த பந்துத் தடுப்பாளராக பல்கலைக்கழக அணியைச்சேர்ந்த றொபேஷனும், சிறந்த் பந்து வீச்சாளராக மானிப்பாய் பரிஷ் அணியைச் சேர்ந்த எஸ்.பாஸ்கரனும், சிறந்த துடுப்பாட்டக்காரராக பல்கலைக்கழக அணியைச்சேர்ந்த ஆர்.ஷாஜகானும் தெரிவாகினர். ஆட்டநாயகனாக என். ஜெயகாந்தன் தெரிவானார்.

## மதுபோதையில் பொலிஸாரை தாக்கிய நபர்

மதுபோதையில் கதைத்துக் கொண்டிருந்த இருவரிடையே ஏற்பட்ட தகராறு கத்திவெட்டில் முடிந்தது. வெட்டியவரைக் கைதுசெய்யச் சென்ற பொலிஸாரும் தாக்கப்பட்டனர். கத்திவெட்டுக்கு இலக்காகிய த.ஜெயகுருநாதன், இளவாலைப் பொலிஸில் சென்று முறையிட்டார். சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், வெட்டிய நபரைக் கைதுசெய்ய முற்பட்டவேளை, குறிப்பிட்ட நபர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினார்.

உடனடியாக மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு, குறிப்பிட்ட நபரையும், அவரது சகாவையும் கைதுசெய்தனர். (41)

## வடமராட்சி மீனவர்...

பொறுப்பான அதிகாரி உட்பட முத்தரப்பினரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் - வடமராட்சிக் கடற்பரப்பில் மீனவர்கள் எந்தவிதத் தடைகளுமின்றி, 24 மணிநேரமும் கடற்தொழிலில் ஈடுபடமுடியுமெனப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக - வடமராட்சிக் கடற்பரப்பின் கரையோரப்பகுதியில் அகற்றப்படாதிருக்கும் முருகைக்கற்பாறைகளை அகற்றுவதற்கும் அனுமதிக்கப்பட்டது.

இறங்குதுறையிலிருந்து இன்னொரு இறங்குதுறைக்கும், மற்றும் வெளிமாவட்டங்களிலிருந்து கடல் வழியாக மீன்பிடிப்படகுகளை எடுத்து வருவதற்கும், படையினர் அனுமதியினை விரைவாக வழங்குவதாகவும், அண்மையில் படகு ஒன்றினுள் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டதால், படகுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கையை கைவிடமுடியாதென படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - மணற்காடு மற்றும் தும்பளை, கற்கோவளம் பகுதிகளில், கடற்தொழிலில் ஈடுபட, நேரக்கட்டுப்பாடுகள் எதுவும் இல்லையெனவும், அவ்வாறு படையினர் யாராவது தடுத்தால், அந்த விடயம் தொடர்பாகத் தமக்குத் தெரியப்படுத்தினால் சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை,வடமராட்சி கடற்பரப்பில் - அத்துமீறிக் கடற்தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களை, கட்டுப்படுத்த, இருநாட்டு அரசாங்கங்களும் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும், இந்தச் சம்பவம் தொடர்பாக தாம் எந்தவித நடவடிக்கையையும் எடுக்க முடியாதிருப்பதாகவும் தெரிவித்த படையதிகாரி, கடற்படையினரின் இந்த விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் - தொழிலுக்குச் செல்லும் போது, வழங்கப்படும் பாஸினை விரைவாக வழங்கி தொழிலுக்குச் செல்ல உதவுவதாகவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (09)

## அபிவிருத்தி - நிரந்தர...

புனர்நிர்மாணமும், உடனடித் தேவை என்பதை அறியமுடிந்தது. இந்தக் கண்ணோட்டத்துடன்தான் ரோக்கியோ மாநாட்டில், சர்வதேச சமூகம் 4.5 அமெரிக்க பில்லியன்களை வழங்கியுள்ளது.

இந்த நிதி அடுத்த 3 வருடங்களுக்குள் வழங்கப்படும். ஜப்பான் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும்.

சமாதான காலத்தில் வளமான சமூகம் இனவேறுபாடுகளை மறந்து செயற்படுவது அவசியமானதொன்றாகும்.

ரோக்கியோ மாநாடு முடிவடைந்து இரண்டு மாதம் கடந்தும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளும், அரசும் உடனடியாக பேச்சுவார்த்தை மேசைக்கு மீளவும் வரவேண்டும்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, அரசும் புலிகளும் விரைவில் ஓர் உடன்பாட்டுக்கு வரவேணடும். வடக்கு - கிழக்கில் மனிதாபிமான உதவிகள் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும். இலங்கையின் பாரம்பரிய நண்பனாகவே ஜப்பான் இருக்க விரும்புகின்றது.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைபபுடன், ஜப்பான் மிகப்பெரிய பங்களிப்பை - உதவியை செய்யவுள்ளது. ஆரம்ப சுகாதாரம், சிறுவர் நலன் செயற்பாடுகளுக்காக யுனிசெப் ஊடாக 2.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஜப்பான் வழங்கியுள்ளது.

ஜப்பான் - தொடர்ந்தும் சமாதானம், புனர்நிர்மாணம், அபிவிருத்தி ஆகிய செயற்பாடுகளில் அக்கறையுடன் செயற்படும்.

ரோக்கியோ மாநாட்டுத் தீர்மானத்தின்படி -புனர்நிர்மாணம், அபிவிருத்தி என்பன மேற்கொள்ளப்படவேண்டுமாயின், சமாதானப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றார்.

இதனைத்தொடர்ந்து - யுனிசெப் பிரதிநிதி கிட்ஸ்ம உரையாற்றினார். (09,111)

COMPUTER COURSES

New Batches Start on Batch 1 :16.08.2003 Batch 2 :18.08.2003 At 10.00 A.M

Diploma in Computer Programming
Diploma in Java Programming
Diploma in Visual C Programming
Diploma in Visual Basic Programming
Diploma in Information Technology

உங்கள் முயற்சிக்கு....



இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

கணனி கல்விக்கு தனித்துவம் மிக்க
IIS
நிறுவனத்தில் இணைவதனூடாக
கணனி உலகில் நீங்கள்
அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

Diploma in Internet Technology
Diploma in MS Office
Diploma in Eng. Drawing & AutoCAD
Diploma in Hardware Technology
Diploma in Desk Top Publishing

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
Head Office: IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-2222831 Email: iis@sltnet.lk
Branch: IIS, Nelliyady, Karaveddy



இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும். (காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 - 6080660, 021 - 2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(சி-1299)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.